
# கலங்கரை விளக்கம்

## நெடுந்தீவு ஒன்றியம் ~ (ஐ.இ)





**21st October 2006**

**St. Michael's Church Hall, Wembley**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# MARUTHI CASH & CARRY



**15-17 Queensbury Station Parade**
**Queensbury HA8 5NR**
**Tel: 020 8952 6655**
**Fax: 020 8952 0201**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெற்ற தாயாகிய நெடுந்தீவு அன்னையே!

கன்றுகளை நினைத்தமையால் வழி நீளம் மடிசொரியும்
கறவையினம் செழித்த தாயே!
காவலனாம் வெடியரசன் கோட்டையுடன் குதிரைகளும்
காட்சிதரும் களிப்பின் தாயே!
குன்றுகளாய் எழுந்துகடல் வலம்புரியை வாரிவந்து
குவிக்கின்ற கரையின் தாயே!
கோலமுறு கலைவாணர், புலவோர்கள், கமவேந்தர்
கூட்டத்தால் சிறந்த தாயே!
என்றுமுள செந்தமிழின் சந்தன மணங்கொண்டு
இளந்தென்றல் திரியும் தாயே!
எண்டிசையும் தமிழன்னை தூதுவனாய் உலகேற்றும்
ஏந்தல் தனி நாயகத்தின் தாயே!
மன்றுகளில் அன்பொழுக விருந்தோம்பி வாழ்ந்துவரும்
மங்கையரைப் பெற்ற தாயே!
மலரடியை வாழ்த்தி நாம் விழா எடுக்கும் இவ்வேளை
வரங்களை அருளுவாயே!

செவாலியர்
கலாநிதி - “அமுது”-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை விளக்கம்

பொங்கு திரை இந்து மகா சமுத்திரத்தின்
மங்காத மாமணியாய் விளங்கும் ஈழம்
திங்கள் ஒளி திலகமென விளங்கா நிற்கும்
செப்பரிய சிறப்புடன் நற் பெருமை சாரும்
எங்கள் நெடுந் தீவகத்தின் பெருமை தன்னை
ஏற்ற மிகு கலங்கரை விளக்கம் ஆய
சங்கு கரை சேர்ந்து இனிய கீதம் பாடும்
தண்ணொழி சேர் தாயகமே வாழி! வாழி!!

கொக்கரக் கோ வென்று சேவல் கூவ
குவிந்த கருங் குயிலினின் மெல் இனிய கீதம்
தத்தி வர தாயுள்ளம் துயில் கலைந்து
தலைவன் அடி வணங்கி இறை பதம் பணிந்து
மெத்தி நிற்கும் தம் கடமை இயற்றி என்றும்
மேதினிக்கோர் தத்துவமாய் விளங்கி நிற்கும்
பத்தினிகள் வாழும் நற் பண்பு மிக்க
பாவலர்கள் பண்டிதர்கள் தவழ்ந்த தீவு!

ஆதித்தன் செங்கதிர்கள் பரப்பி மெல்ல
ஆழி அடி வாரத்தில் தவழ்ந்து வார
மீனவர்கள் நீண்ட சுறா திருக்கை சூடை
மிகு முரல் கண வாய் நண்டு மற்றும் ஆய
மேவும் எழில் கட்டு மரமும் சார
மிகுந்(து) ஒலிக்கும் ஆலய மணியின் ஓசை
வேத ஒலி தேவ தூதுவனைப் பாடி
மீட்டி வரும் ஞான எழில் மிகுந்த தீவு!

பால் தயிர் தேன் பனம் பொருட்கள் மிகுந்த தீவு
பசுந் தீவாய் பண்டையத்தில் திகழ்ந்த தீவு
ஆழி அரண் சுழ அரசன் வீகாமனின்
அரிய பழம் பெருமை மிகு அரண்களோடு
மேவி நிற்கும் கற்பாரும் மினு மினுக்கும்
வெண் பட்டாய் மிகுந்து படர் மணற் கரையும்
தூய இளம் தென்றலொடு தவழ்ந்து வாரும்
துய்ய அலை மகள் அம்மா! சொர்க்கம் இஃதே!

கல்லினால் வேலி கட்டும் தொழில் நுட்பமும்
கரு நாகம் கருடன் விளை யாட்டும் ஒன்றும்
அன்பு மிகும் அரும் பொறையும் ஒன்றி நிற்கும்
அணங்குகள் நன் நீர்க் குடங் கொண்(டு) அசைந்து வார


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்பு மிகு காளையர்கள் வேல் விழியால்
தீய்ந்து மன் மத பாணம் நெஞ்சில் பாய
ஒன்றிணையும் மா மிதிலைச் சீதா இராமன்
ஒப்புயர்வில் தெய்வீகக் காட்சி இஃதே!

கற்றாளை ஆவரை நற் குறிஞ்சா வோடு
காத்தோட்டி மருதோண்டி மற்றும் துன்பு
முற்றோடு நீக்கும் அரு மூலிகைகள்
முற்றுமாய் மேவி நிற்கும் முழுமைத் தீவு
பத்திரமாய் பகலவனும் மேல் திசையில்
பரப்பி அமிழ் செங் கதிர்கள் மெல் அலையில்
தத்தி வரும் கண் கொளா மாலைக் காட்சி
தண் ஒளி சேர் கலங் கரையின் விளக்கம் அன்றோ!

## குடவிலி

சோழர் காலத்திலும். அதன்பின்னரும் தேர்தல் முறைமூலம் கிராசபை உறுப்பினர்களையும் ஆட்சியுறுப்பினர்களையும் தேர்வுநடத்தும் முறையை "குடவோலை" என்றும் நடத்தும் இடம் குடவெளி இதுவே திரிவுபட்டு குடவிலி என்று ஆகியிருக்க வேண்டும்.
சான்று உருத்திர மேரூர் கல்வெட்டு.
(இதில் தெரிவு செய்பவர் குடவெளி விதானையாராக இருக்கலாம்போல்)

## பெருக்குமரம்
## ATLAS CEDAR TREE தேவதாரு மரம்

வரலாற்றுக்காலத்திற்கு முன் உலகில் பல இடத்திலும் பரவியிருந்த மரம் காலநிலை மாற்றத்தினால் இன்று ஒருசிலஇடங்களில் தான் உண்டு.

## சாறாப்பிடடி

குதிரைகளைப் பராமரித்த சாறப்பிட்டி என்ற இடத்தில் டி.சேரம் (de Seram) என்பவன் பலகிணறுகள் மற்றும் லாயங்கள் கட்டுவித்தான். டி சேரம் இருந்து கண்காணித்த இடம் சேரம் பிட்டி காலப்போக்கில் சாறாப்பிட்டி எனத்திரிவுபட்டதெனலாம்.

## இராமர் பாதம்

நெடுந்தீவில் மேற்குப்பகுதியில் இராமர் பாதம் என ஒரு வலது பாதம் காணப்படுகிறது. இராமேஸ்வரத்திற்கருகில் இராமர்பாதம் என்ற வழிபாட்டுத்தலம் உண்டு.

**தகவல் வி.சு. சாந்தமூர்த்தி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம் சென்ற கவி மாமணிக்கு
## நெடுந்தீவு ஒன்றியத்தினரின் அஞ்சலிப் பூ



### விருத்தம்

சொல்லிலே முல்லைப்பூ உடை அல்லிப்பூ
சுவையிலே தேன் தொடுப்பு துடிதுடிப்பு
நல்லிதயத் தாமரைப்பூ உயர்ந்த பண்பு
நாடிவந்தால் புன்னகைப்பூ தமிழ் விரிப்பு
எல்லையற்ற எழுத்துக்களில் விறுவிறுப்பு
இலக்கியத்தின் சிந்தனையே அவரினிப்பு
எல்லாப் பூவுஞ் சேர்ந்தால் அர்ப் பணிப்பு
ஈழத்தின் கவிமணிப்பூ ஞானிப் பூவே

குயிலினங்கள் பாடுதற்குக் கோடைக் காலம்
குவிந்த அல்லிப் பூவுக்கு இரவுக்காலம்
மயிலினங்கள் ஆடுதற்கு வாடைக்காலம்
மருதநிலப் பயிர் செழிக்க வசந்த காலம்
தயிருடைத்து மோராக விடியற்காலம்
சஞ்சலத்து நீர் துடைக்க அமைதிக்காலம்
துயர்மறந்து பாட்டெழுத "ஞானி" என்ற
சுடர்மணியாங் கவிமணிக்குக் காலமுண்டோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேஷ விருந்தினர் Dr. கோமளேஸ்வரி புவனராஜா அவர்களிடம் இருந்து

## நான் காண விரும்பும் நெடுந்தீவு

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்ற வானிலும் நனிசிறந்ததுவே" எனும் ஆன்றோர் கூற்றுக்கு அமைவாக ஒரு செல்வச் செழிப்பான நாடாக நெடுந்தீவைக் காணவேண்டும் என்பது எனது அவா. ஆனால் இன்று நாம் எல்லோரும் நெடுந்தீவு ஒரு பின்தங்கிய இடம் என்பதை எதிர்க்கருத்து எதுவுமின்றி ஏற்றுக்கொள்ளும் நிலையில் தான் இருக்கின்றோம். இன்று வன்னிப்பிரதேசம் எப்படி முன்னேற்றம் அடைந்துள்ளதோ அப்படி ஏன் நெடுந்தீவு முன்னேற்றம் அடைய முடியாது என்பது எனது கருத்து.

இன்று புலம் பெயர்ந்து வாழும் நம் மக்களிடையே பொருள் வளமும் சகலதுறைகளுக்குமான தொழில்நுட்பவளமும் ஏராளமாக இருக்கிறது. இவ்வளங்களுடன் தீவிலுள்ள இயற்கை வளங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் பொன்கொழிக்கும் பூமியாக நெடுந்தீவை மாற்ற முடியும்.

முதலில் கடற்பிரயாணம் குறைந்தது நாளாந்தம் நான்கு தடவையாவது நடைபெறவேண்டும். அப்பொழுதுதான் அங்கு சேவையாற்றும் வேறுஇடத்தைச் சேர்ந்தவர்கள் தங்களால் முடிந்த அளவிலான பங்களிப்பை, எமது தீவின் முன்னேற்றத்திற்கு முழுஅளவிலான சேவையை வழங்க வழியுண்டாகும்.

அடுத்தபடியாக மாணவசமுதாயத்தினுடைய கல்வி அபிவிருத்தியடையவேண்டும். அதற்காக சைவப்பிரகாசா வித்தியாசாலையில் விஞ்ஞானம் கணிதம் ஆங்கிலம் படிப்பிக்க கல்வி பொதுத்தராதர பரீட்சை சாதாரண வகுப்புகளிலும் மகாவித்தியாலயத்தில் இப்பாடங்கள் சாதாரண உயர்தர வகுப்புகளிலும் கற்பிக்க வசதிகள் உண்டாக்கப் படவேண்டும். கடல்சார் வளங்கள் அபிவிருத்தியடையவேண்டும். ஆழ்கடல் மீன்பிடியை ஊக்குவிப்பதோடு மீன் பதனிட்டு ஏற்றுமதிக்கு உதவியாக பனிக்கட்டித்தொழிற்சாலை உருவாக்கப்பட வேண்டும். மண்ணின் வளம் அபிவிருத்தி செய்யப்படும் போது கடல்நீர் ஊருக்குள் வராது தடை-செய்யப்படுவதோடு குளங்களெல்லாம் நன்னீர்த் தேக்கங்களாக ஆக்கப்பட வேண்டும். அப்போது கடற்தொழிலில் நாடு ஊக்குவிக்கப்படும் போது சந்தைப்படுத்தும் பயிர்களான மிளகாய் வெண்காயம் உருளைக்கிழங்கு போன்ற பயிர்கள் செய்கைபண்ண வசதிகள் செய்யப்பட வேண்டும். மேலும் நன்னீர்த்தேக்கங்களில் மீன் இறால் நண்டு வளர்ப்புக்கு வழி செய்ய வேண்டும்.

மாசடையாத நிலக்கடலும் வெள்ளைமணற்கடற்கரையும் கொண்ட வெல்லைப் பகுதியில் உல்லாசப் பிரயாணிகளை ஊக்குவிக்கும் திட்டம் புகுத்தப்பட வேண்டும். பிரயாணிகளின் வசதியை கருத்திற் கொண்டு நம் தீவுக்கும் குடாநாட்டுக்குமான விமான சேவை (Heli coptor) ஒன்றை நடாத்துவது அவர்களுக்கான முழுஅளவிலான சேவை எமக்குக் கிடைக்கிறது.

வைத்திய சேவை முன்னேற்றப்பட வேண்டும். நான் அங்கு குறுகிய காலம் சேவை செய்தபொழுது அங்கு உள்ள வைத்திய சாலையில் வசதிகள் குறைவாக இருந்தது. எனினும் தற்பொழுது மிகவும் சிறப்பாக இருக்கிறது என்று அறிந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வசிக்கும் நம்மவர்கள் ஒன்று சேர்ந்தால் மேற்கூறப்பட்டவற்றை செயற்படுத்துவதில் சிரமமிருக்காது. நாடு விடுதலையடையும் போது "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" எனும் முதுமொழிக்கு அமைய நாமும் ஒன்றுசேர்ந்தால் நெடுந்தீவு ஒரு பொன்கொழிக்கும் பூமியாக மாறுவதோடு எனது கனவும் நனவாகுவது உறுதி.

**The Delft People Cultural Organization - Canada**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேஷ விருந்தினரிடம் இருந்து



*Sivasampu. Aathithan B.Sc., M.Phil. , M.Phil.*
*7 Grasdene Road, London SE18 2AS, UK.*
*Tel: 020 8855 2896 (Residence)*
*020 7188 3869 (Office)*
*Fax: 020 7928 0730 (Office)*
*e-mail address: sivasampu.aathithan@kcl.ac.uk (Office)*
*aathithan@o2.co.uk (Residence)*

எனது அன்புக்குரிய நெடுந்தீவு உறவுகளுக்கு,

உங்கள் இந்த வருடாந்த ஒன்றுகூடலின் சிறப்பு மலரான தீவகனாறு விளக்கத்திற்கு எனது வாழ்த்துச் செய்தியை எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். (எனது தந்தைவழி சந்ததியினர் இல்லமா-கும் நெடுந்தீவு என்றதும் பாரதியாரின் பாடல் "தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்ற நெஞ்சில் உதிக்கிறது.

இடம்பெயர்ந்த உங்கள் உறவுகளின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியை முன்னின்று நடாத்தும் ஒன்றியத்தின் அங்கத்தவர்களை பாராட்டுவதோடு யாவரும் அனைவரும் நெடுந்தீவு மண்ணின் விருத்திக்கும் அதன் மேம்பா-ட்டிற்கும் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மற்றும் உங்கள் சேவைகள் தொடரும் என நம்புகிறேன். "சேவை தொடர்ந்தும் இடம்பெறுதல் வேண்டும்" என்ற இறைவனின் கட்டளையோடு அருளாக்கோடு நிறைவு செய்கிறேன்.

வணக்கம்

உங்கள்
அன்புக்கும் சேவைக்கும் உரிய

இரா. த. சிவ. ஆதித்தன்.
21/10/2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய இராச்சிய நெடுந்தீவு ஒன்றியத்தினரை வானுயர வாழ்த்துகிறேன்

"மண் வாசனை பொய்த்திடுதல் மனிதத்திற்கு மகிமையதோ!" மண் வாசனையை உலகறிய முனைவுறும் நெடுந்தீவக மண்ணின் மைந்தர்கள், பார் பரப்பில் எங்கெல்லாம் பரந்து, நலிந்து சிறந்து வாழ்ந்தாலும், ஒற்றுமையுணர்வோடு ஒன்றிணைந்து, அவ்வப்போது தம் மண் தமக்கீந்த வாசனையின் மகிமையினை மீளவும் மீட்டு, தமது நன்றி உணர்வின்பால் பெருமையோடு அவற்றைப் பேணி வெளிக்கொணருவதுதோடு, தமது மறு சந்ததியினருக்கும் ஊட்டி உட்செலுத்துவது போற்றுதலுக்குரியதே.

இவ் வகையில், தம்மை ஒன்றித்து சிறப்புற்று, நிகரற்று நிற்கும் ஐக்கிய இராச்சியத்தின் நெடுந்தீவு ஒன்றியம் வருடாந்த மாநாடும், பெரு விழாவும் எடுப்பதையிட்டு மகிழ்வடைகிறேன்.

தலைவரின் தொலைபேசி அழைப்பை ஏற்று முடித்த பின் ஒரு முப்பது அகவை பின்னின்று பார்க்கிறேன். என் இரு விழிகளும் படுக்கைக் கண்ணாடி ஜன்னல்களை ஊடறுத்து அந்த விடியலின் நீல வான எல்லையினைத் தாண்டிச் சென்று, அத் தீவக மண்ணின் மேல் எதை எதையெல்லாம் தேடி எங்கும் சமாந்தரமாகச் செல்கின்றது.

அன்று!. இவ் ஒன்றியத்தின் நிர்வாகிகள் பலர் பள்ளிச் சிறார்கள். அழகிய சிறுவெண் பற்களின் கவலையிலாச் சிரிப்பும், அலசியோடும் கருமைக் கண்மணியோட்டமும், துடிப்புத்தன குறும்பும் என் சமாந்தரப் பார்வையின் கதிர்களை ஊடறுத்துச் செல்கின்றன. அது ஒரு காலத்தில்... இப்போது இவர்கள் தமது அன்றாட கடமைகளுடே தமது நாட்டையும் எண்ணி அதன் துயர் போக்கி ஏற்றிட அயராது, சுயநலம் பாராதுழைக்கும் ஒரு செயல் சாதனையாளர்கள் என்று எண்ணும்போது அன்று கண்டு கடிந்த குறும்புத்தன துடிப்பெல்லாவற்றினதும் அர்த்தங்கள் இப்போ பெருமைப்படக் கூடியனவாக காட்சியளிக்க, அதற்கும் சாட்சி சொல்ல வைப்பதில் மகிழ்வுறுகின்றேன்.

நம் தீவக மண் வாசனையில் பார் புகழடைந்த மேதாவிகளான தமிழ்த் தூது தவத்திரு தனிநாயக அடிகளார், செவாலியர் டாக்டர் அடைக்கலமுத்து (அமுது), ஆயர் இராயப்பு யோசேப்பு, மரகவி கவிமாமணி கே.ரி. ஞானப்பிரகாசம், நடனக்கலை வேந்தன் வேல் ஆனந்தன், மற்றும் பெயரிலடங்கா பல்கலைக்கழக, ஆசிரிய கலாசாலை பேராசிரியர்கள், கல்வியியற் துறை இயக்குனர்கள், மா அதிபர்கள், ஆசிரியர்கள், பண்டிதர்கள், இன்னும் டாக்டர்கள், சட்டத்துறை நிபுணர்கள், பொறியியல் நிபுணர்கள், கிறீஸ்தவ மத குருமார்கள், சகோதரிகள், என எண்ணிலடங்காதோர் பலர், இவர்கள் நம் மண்ணின் சிறந்த அறுவடைகள். ஆனால் பலர் தொழில்சார் அல்லது திருமண குடியகல்வு காரணமாக காலவோட்டத்தில் நம் மண்ணின் வாசனை நுகர்வற்றுப் போனவர்கள். இருப்பினும் இலை மறை காயாக இருந்து அவ்வப்போது கடமையென நம் ஊர்ப் பக்கம் வந்து போகின்றவர்கள். இவையெல்லாம் இருந்தும் பொருளாதார தொழில்நுட்ப யுகத்தில் புதுப் பொலிவுற வேண்டிய நம் மண் அதை அடைய முயல முடியவில்லை.

நெடுந்தீவகத்தில் 1979 இல் நடைபெற்ற உலகத் தமிழ் மறைக் கழகத்தின் 32வது வருடாந்த மாநாட்டில் சிறப்புரையாற்றிய ஸ்தாபகர் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேந்தர் உயர்திரு ஆறு அழகப்பன் அவர்கள் சொல்லிய சில வார்த்தைகள் அப்போது என்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதை மட்டுமல்ல பலரையும் சிந்திக்கத் தூண்டியது. "பசுத் தீவு என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட இத் தீவில் இன்று ஒரு கிண்ணம் பாலுக்காக பகல் வரை காத்திருந்தேன்" என்று ஒரு பெரியதோர் குண்டைத் கூட்டத்தில் தூக்கிப் போட்டார். என் கடமையிலும் ஒரு கறுப்புப் புள்ளி இடப்பட்டதை உணர்ந்தேன். இலங்கையில் உள்ள பல அறிஞர்களும், தொலைக்காட்சி, பத்திரிகை, ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்கள் என்று ஏராளமானவர்கள் வந்து தீவகத்தில் கூடிவிட்டார்கள். செயலாளர் என்ற முறையில் பலதரப்பட்ட விடயங்களை கவனிக்க வேண்டிய பொறுப்பு என் தலை மீதும் இருந்ததால் இந்த ஒரு கிண்ணம் பாலைக் கொடுக்க ஏற்பாடு செய்ய மறந்துவிட்டேன். எடுப்பதும் அப்போது அங்கு உண்மையில் எளிதல்ல. காரணம் கால் நடைகளுக்கு உணவு, நீர் கிடைப்பது அரிதாகிவிட்டது.

ஆனால் பின்னர் நம்மவர் ஆட்சிக்குட்பட்ட பிரதேசசபை மூலம் கால்நடை, சேதனப்பசளை ஏற்றுமதியை தடைசெய்ததாலும், கடலோடு சங்கமமாகிய மழை நீர் தடுக்கப்பட்டதாலும், தற்போது வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் அந்த இலை மறை காய்கள் யாவும் கனிந்து தமது மண் வாசனையை மீண்டும் தம்முள் மீட்டெடுத்து தாயத் தீவகத்தை நோக்கி தம் நேசக் கரம் நீட்டி அணைப்பதாலும், ஆதரிப்பதனாலும் அத்தீவு மீண்டும் பசுமை பெற்று பசுத் தீவாகிறது. ஒரு கிண்ணம் பால் என்ன? ஒரு குடம் பாலே பெறக் கூடிய நிலையினை, 2001 இல் கண்டு வியப்படைந்தேன். இந்நிலை தொடர வேண்டும்.

பல நாட்டு நெடுந்தீவக ஒன்றியங்களின் மக்களின் நிதி உதவியினால் தீவக மக்களின் கல்வியறிவு மேம்பாடடைந்து மக்களின் மனதில் தீவக நலன் சார முன்னிலைப்படுத்தப்படிருக்கிறது. இவ்வொன்றியங்கள் மென்மேலும் வளர்ந்து, அவற்றுள் கருத்துவேறுபாடு இருப்பின் அவை நீங்கி, ஒற்றுமை ஓங்கி, செழிப்புடன் செயற்பட எல்லாம் வல்லவனிடம் வேண்டி, ஆசிகள் கூறி, வணங்கி நிற்கிறேன்.

உங்களது மிகுஅன்பான அழைப்பினை ஏற்று சிறப்பு விருந்தினனாக அங்கு வர முடியாமைக்கு மனம் நொந்தும் நிற்கிறேன்.

உங்கள் மாநாடு சிறப்புறவும், விழாமலர் விரிந்து, நம் மண்வாசனையின் மகிமையையும் மெய்த்திட, மணம் பரப்பிட வேண்டுமென அவாக்கொண்டும் நிற்கின்றேன்.

இராமநாதன் ஜெயராஜா
ஆசிரியன்
மெலபேர்ன்
அவுஸ்திரேலியா
2006


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☎ 2851 65 65
2851 65 66
2854 98 84



# மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

"தாயகம்"

எண் : 12, ருக்மணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை – 600 008.

**வைகோ**
*பொதுச்செயலாளர்*

முகாம் : குற்றாலம்
நாள் : 19.08.2006

நெடுந்தீவு (ஐ.இ) ஒன்றியத்தின் தலைவர்

அன்புமிக்க சகோதரர் திரு செ. சுரேஷ் அவர்களுக்கு,

வணக்கம். தாங்களின் 16.08.2006 ஆம் நாளிட்ட கடிதம் கண்டேன். மகிழ்ச்சி. புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் வேர்களை மறக்காமல் தாங்களின் சொந்த மண்ணின் தேவைகளுக்கு உதவுவதற்காக இன உணர்வு கொண்டு தொடங்கியுள்ள 'நெடுந்தீவு ஒன்றியம்' துன்பக்கடலில் தவிக்கும் எம்மின மக்களுக்கு ஆறுதலாகவும், அரவணைப்பாகவும் விளங்கப் போவதை எண்ணி பெரிதும் மகிழ்கின்றேன்.

பிரித்தானியா தேசத்தில் வாழும் தமிழ்மக்கள் ஒன்றிணைந்து, சொல்லொணாத் துயரில் சிக்கித் தவிக்கும் தமிழ் ஈழ மக்களுக்கு உதவிட உறுதியேற்று தொடங்கப்பட்டுள்ள 'நெடுந்தீவு ஒன்றியம்' தம் இலக்கை எட்டும் என்பதில் ஐயமில்லை.

தாங்களுக்கும், பொறுப்பாளர்களாகப் பணி ஏற்கும் சகோதரர்களுக்கும் என் உளமார்ந்த பாராட்டுக்கள்.

செப்டம்பர் 30 இல் வெளியிடப்படும் "கலங்கரை விளக்கம்" மலர் மணம் பரப்ப என் வாழ்த்துக்கள்.

என்றும் உங்கள் நலம் நாடும்
சகோதரன்,
வைகோ

பெறுநர்:
திரு செ. சுரேஷ் தலைவர்
நெடுந்தீவு ஒன்றியம் (ஐ.இ), இலண்டன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE DELFT PEOPLE CULTURAL ORGANIZATION OF CANADA
## நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா

Est. 1995

Reg. No : 1259205

info@delfteelam.com
www.delfteelam.com

---

**President**
Nadarajah Sivakumaran

**Vice President**
Subramaniam Vivekananthan

**Secretary**
Arumugam Perinpanathan

**Asst. Secretary**
Parameswaranathan Kajan

**Treasurer**
Kankesu Pararajalingam

**Asst. Treasurer**
Paranjasingam Surenuka

**Committee Members**
Thamotharampillai Chandreswaran
Thamaratnam Pathmarany
Perumainar Ramanathan
Pakinather James
Tharmaratnam Suthaharan
Nadarajah Vickraman
Kanapathipillai Anusan
Tharmalingam Selvaraveendran
Kanagarajah Jeyakumar
Thambiayah Anantharajah
Rajendram Soosainathar
Nagalingam Sathasivam
Uthayan Nadarajah

**Patrons**
Nada G.Nadarajah
Visvalingam Sinnathamby

---

<u>கலங்கரை விளக்கம் சிறப்புற நாமும் வாழ்த்துகின்றோம்.</u>

அன்புசார் எம் உறவுகளுக்கு,

ஐக்கிய இராட்சியத்தில் நீங்கள் அமைத்துள்ள நெடுந்தீவு ஒன்றியம் வளர்ச்சியுற்று வருவதையிட்டு நாமும் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நீங்கள் முன்னெடுக்கும் விழாவும், "கலங்கரை விளக்கம்" மலர் வெளியீடும் சிறப்புற வாழ்த்துவதில் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் – கனடாவினர் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறோம்.

வரலாற்றுத் தொன்மை கொண்ட மொழிக்கும், எம் ஊரென்ன, நாடென்ன, உலகிற்கும் கூட ஆற்றி வரும் பணியில் நெடுந்தீவு மக்கள் தனியொரு மகத்துவத்தைக் கொண்டவர்கள் என்பது காலங்களினூடான கண்கூடு.

ஐக்கிய இராட்சியத்தில் வாழும் எம் ஊர்சார் மக்களும், அவர்கள் வழித்தோன்றல்களும் நெடுந்தீவு ஒன்றியம் அமைத்து, ஊரைப் பிரிந்து பரந்து வாழும் எம் உறவுகளோடும் இளைய தலைமுறையினரோடும் எம் பாரம்பரியங்களையும், பண்புகளையும் வலுப்படுத்த, தொடர்புபடுத்த இவ்வொன்றியங்கள் மூலமான சேவைகள் அளப்பெரியவை. அத்தியாவசியமானவை.

இந்த குறியீட்டின் "நெடுந்தீவு ஒன்றியம்" அது கனடாவோ, ஐக்கிய இராட்சியமோ, இன்னும் பல நாடுகளில் உருவெடுக்கும் நெடுந்தீவு ஒன்றியங்களாக அமைந்தாலும், எம் இளைய தலைமுறையினருக்கும் தாயக உணர்வையும், எம் தீவக வளர்வையும் அவர்களினூடு ஊக்குவிப்பது உட்பொருளாகும்.

பல விழாக்கள், நன்கொடை, ஒன்று கூடல்களில் சேகரிக்கப்படும் நிதி, எம் தீவகத்தின், தாயகத்தின் முக்கிய தேவைகளுக்காக உதவப்படுவதில், திட்டங்களை ஒன்றிணைப்பதில் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் – கனடாவினரும் இணைந்து செயற்பட முடியும் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கின்றோம்.

நன்றி, வணக்கம்.

நடராஜா சிவகுமாரன்

தலைவர்

நெ. ம. ஒ. கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்:
க. தியாகலிங்கம்
President:
S. Thiyagalingam

செயலாளர்:
ச. யோசேப்
Secretary:
S. Joseph

உபதலைவர்:
க. சிறிதரன்
Vice President:
S. Sritharan

உபசெயலாளர்:
க ஜெயதாசன்
Asst. Secretary:
K. Jeyathasan

பொருளாளர்:
சி. சாமிலி
Treasurer:
S. Shamili

உபபொருளாளர்:
கு. இளங்கோ
Asst. Tresurer:
S. Ilanko

T.P.
004721697212

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்ற பழந்தமிழ்ப் பாவலன் கணியன் பூங்குன்றனாரின் கவிதை வரிகளை மெய்ப்பிக்கும் வண்ணமும் இன்று புலம்பெயர்ந்து நம் தமிழ் மக்கள் பரவியிருக்கின்றார்கள். இந்த வகையில் எங்கள் தீவக மக்களும் சளைத்தவர்கள் அல்லர்.

இன்று உலக நாடுகள் அனைத்திலும் மிக மிகச் சிறிய தொகையினரான முதல் - தலைநகரான [illegible] வரையிலான நெடுந்தீவு மக்கள் தமிழ் மக்கள் வாழும் அனைத்துப் புலம் பெயர் நாடுகளிலும் பரவி வாழ்கின்றார்கள் என்பது நாம் அறிந்ததே.

இளங்கோ அடிகளாரின் சிலப்பதிகார வரிகளிலே குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு வாய்ந்ததும், தொன்மையானதும் வரலாற்றுப் புகழ்மிக்கதும், வளம் பல கொண்டதுமான பசுந்தீவாம் நெடுந்தீவு இன்று பாலைவனம்போல் காட்சியளிப்பது மிகவும் வேதனைக்குரியதும் நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியதுமான ஒரு விடயமாகும்.

இந்த வகையில் உலகெங்கும் உள்ள எங்கள் தீவக மக்களின் இழப்பினை அறிந்து நாம் எல்லாம் நெடுந்தீவு மக்கள் என்ற ஒருமைப்பாட்டினை வளர்ப்பதற்கும், அவர்தம் நலன்களைப் பேணுவதற்கும், எமது தீவகத்தின் அனைத்துத் துறைசார் வளங்களிலும் கரிசனை கொண்டு, அவற்றைச் சீர் செய்து மேம்படுத்துவதற்காக ஐம்பமைப்பினை உருவாக்கி விக்கும் பொருட்டும், மற்றும் பல நோக்கங்களை உதவிக்கொண்டு வழங்கும் பொருட்டும் நாம் வாழும் புலம்பெயர் தேசம் எங்கணும் நெடுந்தீவு அபிவிருத்தி ஒன்றியங்கள் ஆரம்பிக்கப்பட்டு:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டு வருவதும் பாராட்டுக்குரியது.

இந்த வரிசையில் இலண்டன் மாநகரில் ஆரம்பிக்கப்பட்ட "நெடுந்தீவு ஒன்றியம் - ஐக்கிய இராச்சியம்" என்ற அமைப்பானது தனது சிறப்பான பணிகளோடு வெளிநாடுகளிலும் லண்டனில் வாழும் அனைத்து தீவக மக்களையும் ஒன்றிணைத்து "கலங்கரை விளக்கம்" என்ற மலரையும் ஒன்றுகூடலையும் நடாத்தி வருகின்றனர்.

இன்றும் சிறப்பாக இரண்டாவது "கலங்கரை விளக்கம்" என்ற சிறப்பு மலரையும் வெளியிட்டு வருகின்றனர்.

ஆகவே பல்வேறுபட்ட சிறப்புடைய இவ் ஒன்றுகூடல் சிறப்புறவும், இம் மலரானது என்றும் நெடுந்தீவின் கலங்கரை விளக்காக அமைந்து மென்மேலும் பொலிவுற வாழ்த்துகின்றேன் - "நெடுந்தீவு மேம்பாட்டு நிதியம் ஐரோப்பிய இணையம் - சுவிஸ்" சார்பாக எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வாழ்க தமிழ்மொழி! வளம்பெறுக நெடுந்தீவு!!
வாழ்வோங்குக வாழ்க நெடு-மக்கள்!!!

சு. தியாகலிங்கம்
தலைவர்: நெடுந்தீவு மேம்பாட்டு நிதியம்
ஐரோப்பிய இணையம் - சுவிஸ்
தலைவர்:- உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - நோர்வே - கிளை
பொதுச்செயலாளர்:- உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் (தலைமைப்பீடம், கனடா)
நிறுவனர் பொதுச்செயலாளர்:- நெடுந்தீவு மக்கள் வெளிநாட்டு இந்து விவகாரங்கள் ஆலய புனருத்தாரண இப்பாலிலேயே, பல் பணித்திட்டம்.

"DELFT HOME"
GRANSTANGEN-40B
10501 OSLO
NORWAY.
06-10-2006.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை விளக்கமாகத் திகழ்வோம்

நாற்பக்கமும் கடல் சூழ நடுவில் தனி நாயகமாக கொலுவுற்று இருப்பது எம் பசுத்தீவு. பெரும் இயற்கை வளங்களைக் கொண்ட இத்தீவு போக்குவரத்து மற்றும் குடிநீர்ப்பிரச்சனையால் இன்றளவும் பின் தங்கிய தீவாகவே இருந்து வருகிறது.

இலங்கையில் குதிரைகள் விருத்தியாகிய இத்தீவில் இன்று அந்த இனம் அழுகிவருவதுடன் ஏனைய கால்நடைகளின் பெருக்கமும் குறைந்து வருகிறது. இச் சவாலை எதிர்கொள்ள நெடுந்தீவு ஒன்றியத்தினர் மிகவும் அக்கறையுடன் எமது நிர்வாகசபைக் கூட்டங்களில் விவாதித்து இவ்வருட இறுதிக்குள் சுமார் 5000 மரங்களை நடுவித்து பராமரிப்பதென்றும் மேற்கொண்டு சீரழிந்து கிடக்கும் குளங்களை மறுசீரமைத்து கூடியளவு மழைநீரை தேக்கி வைப்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். போரின் அனர்த்தத்தினால் தொலைபேசிகளே துண்டிக்கப்பட்டு கிடக்கும் இந்நிலையில் ஒரு குறிப்பிட்ட கால அளவை எம்மால் கூறமுடியாது இருப்பினும் நிட்சயமாக நெடுந்தீவு ஒன்றியம் இந்தக் கடமையை செய்து முடிக்கும்.

மீண்டும் ஈழத்தில் போர் வெடித்த போது பொருளாதாரப் பிரச்சனையால் யாராவது பட்டினி கிடக்கும் நிலையினில் உள்ளனரா என நான் நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் அவர்களை தொடர்பு கொண்டு கேட்டபோது அந்தநிலை இன்றுவரை இல்லை என தெரிவித்ததுடன் எங்கள் தீவு கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட இடம் என்று கூறியது எம் மனதிற்கு நிம்மதியளித்தாலும் அப்படி ஒரு நிலை வரின் எமது ஒன்றியம் முன்னின்று செயலாற்றும் எனவும் தெரிவிக்கிறோம். முடிந்தளவு உங்கள் "காரியம் யாவிலும் கைகொடுப்போம் " என்பதே நெடுந்தீவில் வாழும் மக்களுக்கு இன்றைய "கலங்கரை விளக்கம் " ஊடாக நாம் விடுக்கும் செய்தி.

புலம்பெயர்ந்து எவ்விடத்தில் வாழ்ந்தாலும் இன்றளவும் தங்கள் அடையாளங்களை தொலைக்காத இனமாக வாழ்ந்து வரும் நாம், இங்கிலாந்தில் கணிசமானளவில் வாழ்ந்து வருகிறோம். நாங்கள் ஒன்றுபடுவதன் மூலம் இங்கேயே சிதறி வாழும் எமது வருங்கால சந்ததியினரிடம் பரஸ்பர அறிமுகத்தை, கருத்துப்பரிமாற்றங்களை, உருவாக்குவதன் மூலம் ஒரு பாசப்பிணைப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறோம். அதன் மூலம் அவர்கள் தங்களையும் தெரிந்து கொண்டு மற்றவர்களையும் தெரிந்து கொள்வார்கள். ஊரும், உறவும், நட்பும் காலா காலத்திற்கும் போற்றப்பட வேண்டியவை.

எமது முன்னோர்கள் அவர்களது சமகாலத்தில் எல்லோரையுமே அறிந்தும், தெரிந்தும் வைத்திருந்தார்கள். உதாரணமாக வன்னியெங்கும் பரந்து வாழ்ந்த எம் தீவகத்தை சேர்ந்தவர்கள் கூட நெடுந்தீவில் வாழ்ந்தோரை அறிந்தும், அவர்களது சுக, துக்கங்களில் கலந்து கொண்டும் வாழ்ந்திருந்தனர்.

இந்நிலையினை இன்றும் இயன்றளவு இங்கிலாந்தில் மிகுந்த வேலைப்பழுவின் மத்தியிலும் நாமும் கடைப்பிடிக்கிறோம். நிகழ்வுகளின் போது எமது ஊரவரை சந்தித்து பழைய நிகழ்வுகளை மீட்டெடுக்கிறோம் மகிழ்வுறுகிறோம்.

இது எவ்வளவு காலத்திற்கு?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே நெடுந்தீவு ஒன்றியம் இங்கிலாந்தில் வாழும் பெற்றோர்களிடம் கேட்கும் கேள்வியும், ஒன்றியத்தின் தேவையறிந்த கடமையும் என கருத்தில் கொண்டுள்ளது.

சுமார் 6000 மைல்களுக்கு அப்பால் உள்ள தீவில் இருந்து புலம்பெயர்ந்து இங்கிலாந்தில் கணிசமான அளவில் வாழ்ந்து வரும் நாம் மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் நெடுந்தீவு ஒன்றியமாக பரிணமித்து எம்மாலான பணிகளை எமது பிறந்த மண்ணிலும், புலம்பெயர் இம்மண்ணிலும் புரிந்து வருகிறோம்.

**"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"**

தானுண்டு தன்வாழ்வுண்டு என வாழத்தலைப்படாமல் ஊருண்டு அதன்பேர் எமக்கொரு உறவுண்டு நாளைய தலைமறைக்கும் இதனால் நல் பயனுண்டு என ஒவ்வொருவரும் வாழத்தலைப்பட்டால் சப்த தீவுகளில் முத்தென விளங்கும் நம் தீவுக்கும் புகழ்சேர்த்து இங்கிலாந்திலும் நெடுந்தீவராய் தலைநிமிர்ந்து வாழலாம்.

ஒன்றியம் தனது மிக முக்கியமான பணியாக கருதுவது இங்குள்ள எமது எதிர்காலச் சந்ததியினரின் இணைவும், உறவும் வளர்வும் பற்றியே.

இதற்காகவே "கலங்கரை விளக்கம்" எனும் கலை நிகழ்ச்சிகளை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

தன்பற்றை விட தன்னூர் பற்று உள்ளவர்கள் நெடுந்தீவு மக்கள் அவர்கள் சென்ற இடம் எல்லாம் தழைத்தது, கொழித்தது. புலம்பெயர்ந்து வாழும் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு துறைகளிலும் தங்கள் முத்திரையை பதித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

நீங்கள் ஒருமித்து இணைவதன் மூலமே இங்கும் எமது தீவகத்திலும் எமக்கான பணிகளை முன்னெடுத்து கலங்கரை விளக்கமாக திகழ முடியும்.

**"வளர்க நம் வருங்காலம்**
**வாழ்க நம் தீவகம்".**

செ. சுரேஸ்
தலைவர்
நெடுந்தீவு ஒன்றியம் (ஐக்கிய இராச்சியம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தேச பக்தி என்பது வெளிநாட்டு படைகளை எதிர்க்கும் போது மட்டும் வெளிப்படுவதல்ல தேச மக்களை நேசிப்பதும்"

புலம் பெயர்ந்து நீண்ட தூரத்தில் வாழ்ந்தாலும் நாம் பிறந்து வளர்ந்த தாய் மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் பொதுவாக எமது மாணவ சமூகத்தின் வளர்ச்சிக்கும் நம் புலம்பெயர் உறவுகள் தான் முன்வந்தாக வேண்டும்.

குழந்தை பிறந்தவுடன் நடக்கவோ ஓடவோ எதிர்பார்க்க முடியாது. அப்படி நடந்தால் எவ்வளவு சந்தோஷப்படவேண்டிய விடயம் அல்லவா. ஏதும் சிறிய காரணங்களைக் காட்டி உருவாகி வரும் நல்ல செயல்பாடுகளைத் தடுக்காமல் எல்லோரும் ஒற்றுமையாக செயல்பட்டால் அங்கு இயல்பு வாழ்வு உருவாகும் போது பல அபிவிருத்தித் திட்டங்களை செய்து "சிறிய சிங்கப்பூர்" என மிளிரச் செய்யலாம். இது புலம்பெயர் உறவுகளின் உறவில் தான் முடியும். எமது தலைமுறையுடன் நின்றுவிடாது நிமிர்ந்து நிற்கும் பெருக்கு மரம் போல் பெருமையாக பின்னாளில் நமது சிறார்களும் தமது சொந்த நெடுந்தீவை மேம்படுத்த முன் வருவார்கள்.

அன்று சேயூர் தொடர்புகளை பின்னாளில் வந்த நோளன் (Nolon) பிரபு நிறுத்தினான். அத்துடன் எமது பட்டணத் தொடர்களின் மகுடம் இறங்கியது. பெரியதுறை சிறிய துறையாகியது. இன்று புலம்பெயர்ந்து மண்டபத்திலும் புதுக்கோட்டையிலும் அகதி என்று அடிப்படை வசதியின்றி வாழ்கின்றனர் நம்மூர் மக்கள். சோழப் பேரரசின் சோகத் தொடரைப் பார்த்தீர்களா? எமக்கென ஒரு சொந்த தேசம், ஊர் தேவை தான். இன்னாளில் மறந்து விட மண்போட்டு மக்களை குடியேற்றிய இடமா நெடுந்தீவு.

வெடி அரசன் முதல் வெள்ளையன் வரை வீரம் பெருமை கூறும் பெரியதுறை, மாவிலி எத்தனை மரக்கலங்கள் தென்நாட்டிற்கும் பிறநாட்டிற்கும் திரவியத்தை ஏற்றி இறக்கியதை மறக்க முடியுமா? இராமபிரானின் சவேரியாரின் புனித திருப்பாதம் பட்ட புண்ணிய பூமி. இன்னும் எத்தனை எத்தனை புலம்பெயர் நாடுகளில் உள்ள தீவக அமைப்புகள் அங்கு மக்களுக்கு செய்யும் உதவிகளைக் கண்டு சில தீய சக்திகள் மனம் வெதும்பி தீவுகள் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் முன்வந்து விடுவார்களோ எனப் பயந்து எம் தீவக ஒற்றுமைக்கும் ஈழ தியாகத்திற்கும் கரும்புள்ளி வைக்க தீவக மைந்தர்கள் என குழப்பியடிக்கும் கூட்டம் கனடாவில் பிரசுரம் விடுவார்களாம். இங்கும் உண்மைளை தெரியாது தீவக மக்கள் மீது வெறுப்பு படும் படியாக இலவசமாக செய்தியினை பெரிதுபடுத்தி விடுகின்றனர்.

தீவகக் கடல் உள்ள வரை குமுதினிக் கொலையை மன்னிக்கவோ மறக்கவோ மாட்டார்கள் எம் மக்கள். ஈழத்தின் செங்கடல் அல்லவா அது . . .

**"காரியம் யாவினும் கை கொடுப்போம்"**

வி. சு. சாந்தமூர்த்தி
செயலாளர்
நெடுந்தீவு ஒன்றியம் (ஐக்கிய இராச்சியம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புமிகு மருமக்களுக்கு,
குலம் மாமாவின் அன்பு மடல்

உங்கள் அனைவர் மீதும் நான் அசையாத நமபிக்கை வைத்திருக்கிறேன், அத்துடன் மிகுந்த மதிப்பும் வைத்திருக்கிறேன். உங்களோடுதான் இந்த விடயத்தைப் பற்றிப் சேுவது பொருத்தமானது!

"புலம்பெயர் இளையோரும் தாய் மண்ணும்" இது தான் இம்முறை நான் சேர்த்துக்கொண்ட தலைப்பு. பொருள் பொதிந்த தலைப்பு, பொருட்படுத்தப்படவேண்டிய கனமான விடயம். எதிர்த் திசைகளில் முனைகாட்டிக்கிடக்கும் நீண்டதொரு கயிற்றை - வடத்தை எடுத்து அதன் முனைகளை முடிந்து விட்டால் என்னவாகும்? முடிவில்லாத் தொடர்புள்ள வளையம் ஒன்று உருவாகும் அல்லவா? அவ்வாறான முனைப்புத்தான் இந்தத் தலைப்பினுள்ளே இருந்து முகிழ்க்கிறது.

புலம்பெயர்வு, இளையோர்கள், தாய்மண் - இந்த மூன்று பதங்களும் நம் வாழ்நெறியோடு பின்னிப் பிணைந்து இருக்கின்றன. புலம்பெயர்வு பற்றி வள்ளுவனும் கூறியுள்ளான். அறிவு தேடிப் புலம் பெயர்தல், பொருள் தேடிப் புலம்பெயர்தல், படை நடாத்திப் புலம்பெயர்தல் என்பன தான் அவன் சாற்றிய புலப்பெயர்வு. ஆனால் எமக்கு நேர்ந்த புலப்பெயர்வு, ஏதிலியாய் புலம் பெயர்ந்த கதை குறளில் இல்லை. ஆனாலும் குறள் பொய்யாமொழி என்பதற்காக எம் ஏதிலிப் புலப்பெயர்வை தலைகீழாக மாற்றி வள்ளுவத்தின் வரையறைக்குள் வகுத்து விட்டோம்.

ஆம்! அறிவு தேடி உயர்ந்து செல்கிறோம், பொருள்தேடி செழிப்புடன் வாழ்கிறோம். படை நடாத்தப் பலம் சேர்க்கிறோம். படை நகர்த்தி பகை விரட்ட ஓரளவு பலம் சேர்க்கிறோம். நாம், நாம் என்று சொல்லிக்கொண்டே செல்கிறேன். இவற்றை உண்மையில் யார் செய்தது? அன்று இந்த நாட்டுக்கும் அயல் நாடுகளுக்கும் ஏதிலிகளாகவும், மாணவர்களாகவும் வந்த உங்கள் பெற்றார் தான் இதை நிலைநாட்டினார்கள். இவர்கள் வழிவந்த "இன்றைய இளையோரும் தாய் மண்ணும்" என்பது தான் இன்றைய பேசு பொருள்.

இந்த இடத்தில் தாய்மண் என்பதை சற்று ஆழமாகப் பார்ப்போம். மேலும் கூர்மையாகப் பார்ப்போம். நமது தாய் மண் கோட்பாடு ஆழ வேர் ஊன்றி அகலக் கிளை பரப்பி நிற்கும் பெரு விருட்சத்தின் வெளிப்பாடு. இங்கே கிளைகள் உங்கள் பெற்றோர் என்றால் அதில் இருந்து மண்ணை நோக்கி இறங்கும் விழுதுகள் தான் நீங்கள். ஆம் நீங்கள் இந்த மண்தொட்டு வேர்விட்டாலும் சொந்த மண்ணின் மணம் இருக்க வேண்டும்.

ஆனால் புலம்பெயர் இளையோராகிய உங்களுக்கு ஊர் என்றால் உங்கள் வேர் இருக்கும் இடம் தான் அது என்ற உயர்வு இருக்கிறது. நீங்கள் என்றுமே முகம் இழந்து போய் விட மாட்டீர்கள். ஆனாலும் இதுவெல்லாம் மனதுள் இருந்தால் மட்டும் போதாது. செயலிலும் காட்ட வேண்டும். உருவம் கொடுக்க வேண்டும்.

நீங்கள் உங்களை அடையாளப்படுத்த தாய்மண்ணை மையப்படுத்தி செயல்பட வேண்டும். நீங்கள் இன்னும் சிறு குழந்தைகள் அல்ல. உங்கள் தலைவிதியை நீங்களே கையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கொண்டு நெறிப்படுத்திக் கொள்ளத்தக்க ஆளுமையை இந்தப் புலம் பெயர் நாடுகள் பயிற்றுவித்துள்ளன. உங்கள் பெற்றாருக்குப் புறம்பாக தாய் மண்ணை மேம்படுத்தும் சிறுசிறு செயல் திட்டங்களை நீங்கள் வடிவமைக்க வேண்டும். இதற்கு முன்னோடியாக இங்குள்ள நம் இளையோர் நாடளாவிய ரீதியில் இணைய வேண்டும். முதலில் நமக்குள்ளே தாய்மண் பற்றிய தெளிவு வேண்டும். அத்தோடு உங்கள் ஆற்றலில் உங்களுக்கு நம்பிக்கை வேண்டும். எனக்கென்றால் உங்கள் மீது நிறைய நம்பிக்கை இருக்கிறது. நம் தாய் மண்ணில் திசை தோறும் கையடக்கமான செயற்திட்டங்களை நீங்களே தத்து எடுத்துச் செயலாக்க வேண்டும்.

இந்த இடத்தில் ஒரு விடயம் என் நினைவில் வருகிறது. உங்கள் வயதை ஒத்த இளையோரின் இயக்கம் ஒன்று ஈழத்துக் கரையோரக் கிராமங்களான காரைநகர், குருநகர் ஆகிய இடங்களில் தொடக்கி வைத்து செயல்படுத்திய செய் திட்டம் தான் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நோர்வே என்ற தேசத்தையே நமக்குத் தெரியப்படுத்தியது. நோர்வீஜிய நல்லொழுக்க இளையோர் இயக்கம் தான் இதற்கு முதல் அடி எடுத்து திட்டத்தை செயலாக்கியது. எம்மை அளந்தது நம்மவர் பலர் இதன் பயனால் நோர்வேயை அளக்க வாய்ப்புக்கிடைத்தது. இந்தப் பிணைப்பின் இன்றைய அரசியல் விளைவு உங்களுக்குத் தெரியும்.

இந்தத் தடவை தாய் மண்ணை வளம் படுத்தும் பணி உங்கள் கடமையாக வந்து விட்டது. பல்வேறு மட்டத்தில் ஆற்றல் கொண்டவர்கள் நீங்கள். அதற்கமைய குழுக்களாக, சிறப்புக்குழுக்களாகப் பிரித்துக் கொண்டு செயற்படுங்கள். மழலையர் இல்லம் முதல் முதியவர் இல்லம் வரை தாய் மண்ணின் வாழ்வின் ஒவ்வொரு படி நிலையிலும் நீங்கள் கை பதிக்க வேண்டும்.

படிப்பகங்கள், சூரிய மின் திட்டம், சிறு பண்ணைத்திட்டம், இலகு பொறியியல் திட்டம், கிராமிய விளையாட்டுத் திட்டங்கள், சிற்றூர் அரங்கு, மனவள மையம், பள்ளி ஆய்வு கூடம், இசைக்கருவி மையம் என எத்தனையோ தேவைகள் தாய் மண்ணில் உங்கள் உதவி நாடிக் காத்துக்கிடக்கின்றன.

ஒருங்கிணைந்த சிற்றூர் மேம்பாட்டுத்திட்டங்கள் பல உரிய சிறப்பறிஞர் துணையோடு தயார் நிலையில் உள்ளன. இவற்றுள் சிலவற்றையாவது எமதாக்கிக்கொள்ள வேண்டும். காலம் கரைகிறது. மேலும் தாமதிக்கக்கூடாது.

தாய் மண்ணில், உங்கள் வயது இளையோருடன் பிணைப்பை ஏற்படுத்துவோம். பெயர் சொல்லி அழைக்கப்படும் அளவுக்கு நீங்கள் ஒவ்வொருவரும் ஓரிரு தொடர்புகளையாவது தாய் மண்ணில் வைத்திருக்க வேண்டும். அதுவும் உறவினர் அல்லாதவராக குடும்பத் தொடர்பு இல்லாதவர்களாக இருப்பின் உன்னதமானதாக இருக்கும் என நினைக்கிறேன். உங்கள் மனதை அறிமுகப்பரப்பை விசாலிக்க வைக்கும்.

மீண்டும் சொல்கிறேன் உங்கள் உண்மையான உறவு தாய் மண்ணில் தான் இருக்கிறது. பயன் கருதாத, நடிப்பு அற்ற அன்பு நம் தாய் மண்ணில் நீங்கள் உலவும் போது தான் உங்கள் மீது சொரியப்படும். இதனை உங்களில் பலர் நேரடியாக அனுபவித்திருப்பீர்கள்.

புலம்பெயர் இளையோர்களாகிய, மாணவர்களாகிய உங்களுக்கு இன்னொரு வாய்ப்பும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். உயர்கல்விப் பருவத்தில் இருக்கும் ஆராய்ச்சி மாணவர்கள் இதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு கனிகளை வீழ்த்தலாம். ஆம் உங்கள் ஓய்வுக்களமாக மட்டும் அல்ல, ஆய்வுக்களமாகவும் நம் தாய் மண்ணைப் பயன்படுத்த நீங்கள் முன்வரவேண்டும். உங்கள் ஆய்வுகளின் பேறுகள் நம் மண்ணுக்கும் சுவற வேண்டும்.

இந்தக் கட்டத்தில் உங்களுடன் பயிலும் பன்னாட்டு மாணவர்களையும் இணைத்துக்கொண்டு தாயகத்துக்கு அழைத்துச்செல்லலாம். அவர்களைப் பயன்படுத்தி குறுங்கால விளையாட்டுப்பாசறைகள், நீச்சல், உயிர்காப்புப் பயிற்சிகளை உங்களையொத்த இளையோருக்கு வழங்க வேண்டும். உங்கள் பன்மொழி ஆற்றல் இங்கே கைகொடுக்கும். நம்மவர்கள் உங்கள் சகமாணவர் மீது சொரியும் இயல்பான உபசரிப்பு, அவர்கள் மீண்டு வரும் போது உங்கள் மீதான மதிப்பை மேலும் உயர்த்தும். உங்கள் அடையாளம் மிளிரும். அவர்கள் ஊடாக பன்னாட்டு சமூகங்களுக்கு பல கனமான சேதிகள் எடுத்துச் செல்லப்படும்.

நீங்கள் நிறைவேற்றத்தக்க அனைத்தும் நிறைவேறியாக வேண்டும். நீங்கள் செய்வதற்கு இவற்றைவிட நிறைய இருக்கிறது என்பதை மறக்கக்கூடாது. முக்கியமான திருப்புமுனையில் நிற்கிறோம். இந்த இடத்தில் மிக இளையோரான என் மகனுக்கு சில ஆண்டுகளுக்கு முன் எழுதிக் கொடுத்த என் கவிதை அடிகளை உங்களுக்காக மீண்டும் தருகிறேன்.

" . . . கறி, புளி, கணவாய், நண்டு
காய்ந்த மீன் தேடல் விட்டு
அறிவியல் - ஆக்கும் வித்தை
அற்புதக் கணணி ஆற்றல்
தெறிகடலோட்டம் - மற்றும்
எறிகணை நுட்பம் தேர்ந்து
ஏகுவாய் ஊரை நோக்கி . . . ."

ஆம் தேவை ஏற்பட்டால் எதற்கும் நாம் தயாராக இருக்கவேண்டுமல்லவா? அதனால்

அறிவை வளர்ப்போம், ஆற்றலைப் பன்முகப்படுத்துவோம்
வேருக்கு நீரூற்றும் விழுதுகள் ஆவோம், ஊருக்கு நல்லது செய்வோம்.

நன்றி மருமக்களே! இந்த மடலைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு தமிழ்மொழி ஆற்றலையும் படிப்படியாக வளர்த்துக்கொள்ளுங்கள். தாய் மண் நிச்சயம் கைகொடுக்கும்

## நிதம் உங்களை நம்பி மதிக்கும்

அன்புமிகு
குலம் மாமா
சின்னத்துரை குலசபாநாதன்
(நிர்வாக சபை உறுப்பினர் நெடுந்தீவு ஒன்றியம், ஐக்கிய இராச்சியம்)
2006


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய வயதில் ஓர் சின்ன அனுபவம்

யோகனும் நானும் சபாரத்தினமும்
நொங்கு வெட்ட நோக்கங் கொண்டோம்.
அருவாளைத் தேடி அலைந்து பார்த்தோம்
கூரான அருவாள் ஒன்றுமே இல்லை.

புளியடி வீட்டில் புதிய அருவாள்
இருப்பதாகக் கேள்விப்பட்டோம்
போனோம் மூவரும் புளியடி வீட்டிற்கு
சுந்தரலிங்கத்தைச் சேர்த்துக்கொள்ள

வாடா மச்சான் நொங்கு வெட்ட
அருவாளை ஆச்சியிடம் வாங்கிக் கொண்டு
கொஞ்சம் பொறுங்கள் கேட்டுப் பார்ப்போம்
கொடுத்தால் போச்சு நானும் வாறேன்.

ஆச்சி ஆச்சி அருவாளைத் தாங்கோ
அடுத்த நிமிடம் கொண்டு வாறேன்
கவனம் தம்பி புதிய அருவாள்
போட்டுக் கீட்டுத் துலைத்திட வேண்டாம்

போனோம் நால்வரும் தொட்டாப்பை நோக்கி
பொலிவான நொங்குக் குலைகளைத் தேடி
பார்த்தோம் மேல் நோக்கி பனைமரம் எல்லாம்
தீர்த்தோம் இதுதான் திறமான நொங்கென

எல்லாம் இயன்ற ஏலேலத்தாரின்
இளைய மகனும் ஏறினான் பனையில்
வெட்டொன்று பட்டதும் விழுந்தது நொங்கு
பட்டொன்று பொறுக்க பறந்து சென்றோம் நாம்

இதாரடா வளவுக்குள் வெட்டுவது நொங்கு
கேட்டோம் சத்தம் எடுத்தோம் ஓட்டம்
சபாரத்தினம் வந்தான் சறுக்கிக் கொண்டு
பாய்ந்தோம் வேலிகள் பயங்கரங் கொண்டு

திரும்பிப் பார்த்தோம் சிறிய நேரத்தில்
சுந்தரலிங்கம் இருந்தார் வேலியில்
ஓடினோம் அவரையும் தூக்கிக் கொண்டு
உறுமினார் குளறியார் பின்னுக்கு நின்று

ஓட்டமும் நடையுமாய் ஒருவருக்கொருவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பினது நல்லது தம்பிரான் புண்ணியம்
சொல்லிக்கொண்டு துள்ளித்துள்ளி
போனோம் புளியடி வீட்டை நோக்கி

சுந்தரலிங்கம் திரும்பிப் பார்த்து
எங்கே அருவாள் துலைந்து போச்சே
என்ன சொல்வேன் ஆச்சிக்கு இப்போ
அடியும் கூட விழவும் கூடும்

கூடினோம் கூட்டம் போட்டோம் திட்டம்
சொன்னால் போச்சு ஆச்சி அடியா
அழுது கொண்டு முன்னே போனால்
அவவும் கொஞ்சம் அனுதாபம் கொள்வா

என்னடா தம்பி ஏண்டா அழுகிறாய்
ஆச்சி ஆச்சி அருவாள் போச்சு
என்னடா சொல்கிறாய் எங்கடா போச்சு
பத்தைக்குள்ளே பாம்போட போச்சு

என்னடா பாம்பு எங்கடா கண்டாய்
நாக பாம்பை நால்வரும் கண்டோம்
எறிந்தோம் அருவாளை பாம்பை நோக்கி
எடுத்தோம் ஓட்டம் பத்தையை விட்டு

வாடா என்னுடன் காட்டடா பத்தையை
ஆச்சி எனக்குப் பயமாயிருக்கு
பாம்பு எம்மை பலமுறையாக
பாய்ந்து பாய்ந்து படங்கள் எடுத்தது

என்னைக் கண்டால் எங்கேயாலும்
இருந்து வந்து உடனே கடிக்கும்
அருவாள் ஒன்றை செய்தால் போச்சு
அதை இனிக் காண்பது அரிதிலும் அரிது

அப்போ பார்த்து அருவாளுடனே
வந்தார் குளறியார் நொங்கையும் கொண்டு
ஆச்சியும் வந்தா அலைந்துவிட்டு
அருவாளைக் கண்டு ஆனந்தங் கொண்டா

பாரண இந்தப் பயல்களின் செயலை
பனங்காயாய் விடாமல் பழுதாக்குறாங்கள்
ஆச்சியும் திரும்பி எங்களைப் பார்த்தா
அந்த இடத்தில் யாருமே இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தத்துடனே ஆச்சியும் போனா
அடுத்த வளவுப் பிள்ளையார் கோவிலுக்கு
உடைத்தார் தேங்காய்கள் அறம்புறமாக
அருவாளின் செயலை ஆண்டவன் பார்த்தார்

Dr. K.E. சந்திரபால்
(நிர்வாக சபை உறுப்பினர் நெடுந்தீவு ஒன்றியம், ஐக்கிய இராச்சியம்)

## தாள் தொட்டு வணங்குகிறோம்

கண்ணீர் பூக்களினை
உம் கல்லறையில் தாளிட்டு
எம் வேர் காத்து நின்றவரின்
தாள் தொட்டு வணங்குகிறோம்
உலகத் திசையெங்கும்
ஓர் நொடியில் உலுப்பி விட்டு
காற்றுடனே கலந்து விடும்
கர்ம வீரரவர்

கொண்டழிக்க வந்தவனை
கூண்டோடு புதைத்தவர்கள்
எம் வம்சமளிக்க வந்த
வல்லூறை எரித்தவர்கள்
எதிரியவன் நெஞ்சினிலே
இடியாய் இறங்கியவர்
தாள் தொட்டு வணங்கிடுவோம்

ஊர் உறங்க வேண்டுமென
ஊண் மறந்தீர் உடல் மறந்தீர்
தமிழன்
வேர் விழங்க வேண்டுமென
சாவணைத்தீர்
காலமதை வென்று விட்டு
காவியமாயனவரே
உம் தாள்தொட்டு வணங்குகிறோம்

Dr.சிவா சுப்பிரமணியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR PARADISE IN DANGER

As we jolted turbulently down the run way
The only thought in one's head
Was how one would cope with the sudden switch of lifestyle,
Having to shift so efficiently
From the sophisticated bustle of the city,
To the serene, tranquil neighbourhoods
In the remote, isolated rural parts
Of our motherland.

My destination the secluded island
Of **Delft,**
I set off quivering, just as the boat did
But as I familiarized with the driver and boarders
And marvelled at the stunning sunset
Upon **my father's homeland**
I pondered a number of things
Concerning **our home land**.

I stepped of the modest boat,
In all its glory
And gazed around with pride
Jubilantly realising that I had stepped
On true home soil
But as I gaped at the dazzling horizon
Only one thing tainted the view;
The armed, government-sent men
Standing at the port menacingly glaring
At passers and bystanders.

The following day, it was whilst visiting
A school,
That it finally hit me how deprived these children
Were,
And as I looked on half devastated, half awestricken
**And saw with my own two eyes**
**The uphill struggle that these children,**
**My own brothers and sisters in a way, faced**
**Whilst trying to study,**
**It wasn't long before the guilty conscience kicked in.**

When preparing to leave
I simply smiled as I saw a tiny boy


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rounding up the hens
But all I was doing was denying,
Denying that these children were
Really struggling to live comfortably
**And denying that they needed urgent help**
**From their more well-off counterparts**
**Around the world.**

**By KAVIAN Kulasabanathan**
**(Age-12 )**

## பிறந்தமண்ணை நேசிப்போம்

நெடுந்தீவு எனது தாய்மண். எந்தையும் தாயுமாய் என் உடன்பிறப்புக்களும் பிறந்து தவழ்ந்து வளர்ந்து படித்து என்னை அடையாளப்படுத்திக் கொண்ட தேசம். எங்களுடைய வாழ்வுக்கு அடித்தளமாய் அமைந்த எமது மண்ணுக்காக நாம் செய்யவேண்டிய கடமைகள் எத்தனையோ இருக்கிறது. ஆனால் நாம் வசதியான வாழ்வைத்தேடி வந்தாலும் நம்மை ஈன்றுஎடுத்த தாய் மண் அல்லல்பட்டுக்கிடப்பதை நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

ஒரு மனிதன் எங்கே பிறந்தாலும் அந்த மண்ணுக்காக உழைக்கவேண்டும். ஆனால் அந்த மண்ணிலே பிறந்து அந்த மண்ணுக்கே சமூகத்தோடு சேர்ந்து உழைப்பது யாருக்கும் கிடைப்பதில்லை. ஆனால் என்னுடைய தந்தையாராகிய இராமன் பத்தன் அந்தமண்ணுக்கே தன்னை அர்ப்பணித்த ஓர் தியாகி என்பதை யாரும் மறுத்துரைக்க முடியாது. எவனொருவன் தன்னுடைய வாழ்வை தான்பிறந்த மண்ணோடு ஆத்மரீதியாகப் பிணைத்துக்கொள்கிறானோ அவனை அங்குவாழ்ந்த மக்களும் நல்லிதையங்களும் மறந்து போவதில்லை. தூய்மை என்பது கடவுளுக்குச் சமமானது. அதுவே அறிவாகிறது. அறிவே தெய்வம் என்பதை உணர்த்துகின்ற அறிவு கல்வித்தாயிடமிருந்தே கிடைக்கிறது. அத்தகைய உள்ளுணர்வும் அறிவும் உரம் பெறவேண்டுமாயின் நாம் கல்விபயிலும் கல்விக்கூடம் தூய்மையாக இருக்கவேண்டும். அத்தகைய தூய்மையை அதன் வனப்பை அழகுபடுத்தி ஆயகலைகள் அறுபத்துநான்கிற்கும் தலைவியாய் விளங்கும் வேதவல்லியின் கடாட்ஷத்தை பொழியும் ஓர் யாகசாலையாக மாற்றிய சிறப்புக்குரியவர். அது எவ்வளவு அரிய தொண்டு என்பதை நான் இன்று எண்ணிகப்பார்க்கின்றேன்.இந்த நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் எத்தனையோ மாணவமணிகள் தங்களுடைய கல்விக்கண்ணைத்திறந்து தங்களை உயர்த்திய வரலாறுகளை என் தந்தையின் மூலம் தெரிந்துகொண்டுள்ளேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே எத்தனை ஆசிரியர்கள் அறிவு ஜீவிகள் அதிபர்கள் வந்து போனார்கள் என்பதும் அவர்களனைவரோடும் அரைநூற்றாண்டு கால அனுபவங்களோடும் வாழ்ந்து மண்ணுக்காகவும் எமது மகாவித்தியாலயத்திற்காகவும் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் உள்ளன்பு கொண்ட இவருடைய உழைப்பை புலம் பெயர்ந்து வாழும் நெடுந்தீவின் புதிய தலைமுறைகளும் அறிந்துகொள்ளவேண்டுமல்லவா! பெரும்பாலும் உயர்ந்தவர்கள் என்பர்களைத்தான் சமூகம் உயரத்தில் வைத்துப்பார்ப்பது வழக்கம் ஆனால் உழைப்பாழியான இந்தமண்ணின் பிரசையை உள்ளத்தனையளவே உயர்வு என்ற இலட்சியத்தோடு வாழ்ந்த என் தந்தை காட்டிய வழியையும் அவருடைய சேவையைப் பாராட்டும் நெடுந்தீவத் தமிழ் ஒன்றியத்தின் மக்கள் சேவையும் சத்தியத்தின் சாட்சியாய் அமையும் என்றே நம்புகின்றேன். என்னுடன் கல்வியயின்ற எனது நண்பர்களோடு இந்த வழியிலாவது எனது தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு எனது மண்ணுக்காக என்னையும் இந்தஉலகிற்கு வெளிப்படுத்திய நெடுந்தீவு மண்ணுக்காக நானும் எனது பங்களிப்பைச் செய்ய ஆயத்தமாக உள்ளேன். நம்மையெல்லாம் சிகரத்தில் ஏற்றிவைத்த மகாவித்தியாலயத்தின் வளர்ச்சியை மனதில் கொண்டு எமது மண்ணைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றுபட்டுழைப்போம் என்று உறுதிபூணுவோம். எனது தந்தையாரின் அகால மரணத்தையும் பகிர்ந்து கொண்டு மண்ணுக்காகப் பாடுபடும் அனைத்து சமூகசேவையாளரையும் பட்டியலிட்டு பாராட்டி அவர்களையும் நினைவுகூர்ந்து புதிய நெடுந்தீவைக் கட்டியெழுப்ப உருவாக்கும் திட்டங்களுக்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டுழைக்க உறுதி கொள்வோம்.

ப.பசுபதி<br>வூப்பெற்றால்<br>ஜெர்மனி




11.12.2005 அன்று நடைபெற்ற எமது இரண்டாவது ஒன்றுகூடலின் போது திரு S.R. பசுபதி அவர்கள் மங்கள விளக்கேற்றுகிறார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தாயகம் - நெடுந்தீவு

எனது அப்பாவும் அம்மாவும் நாங்கள் நெடுந்தீவிலே பிறந்தவர்கள் என்றும், அங்கு சுற்றத்தாருடனும், தீவில் உள்ள மற்றவர்களுடனும் மிகவும் சந்தோஷமாகவும், ஒற்றுமையாகவும், அன்புடனும், பண்புடனும் வாழ்ந்தார்கள் என்றும் மிகவும் பெருமையுடன் சொல்லுவார்கள்.

இலங்கை மிகவும் அழகான, வளமான நாடு என்றும், நெடுந்தீவு இலங்கையின் வட பகுதியில் உள்ள தீவுகளில் பெரிய தீவு என்றும், இலங்கையின் வட பகுதி வரட்சி மிகுந்ததாகவும் அங்கு இங்கிலாந்தில் போல் குளிர் இல்லையென்றும், மாரி காலத்தில் மழை மட்டும் பெய்யும் என்றும், கோடை காலத்தில் நல்ல வெய்யிலாக இருக்கும் என்றும் சொன்னார்கள்.

தீவைச் சுற்றிவர இந்து சமுத்திரம் இருப்பதாகவும், சில இடங்களில் நல்ல மணற் கரைகள் ( Sandy Beaches ) இருப்பதாகவும் கடலில் எப்பொழுதும் குளிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் கூறினார்கள். நன்றாக கடல் வற்றி இருக்கும் பொழுது நெடுந்தீவில் இருந்து தென் இந்தியாவில் உள்ள இராமேஸ்வரத்தைப் பார்க்க முடியும் என்றும் சொன்னார்கள். தங்களது வீட்டுக்கு அருகாமையில் நெடுந்தீவு மேற்கில் இருக்கும் நெழுவினிப் பிள்ளையார் கோவில் மிகவும் பெருமை வாய்ந்தது என்றும், அங்கு ஒவ்வொரு தமிழ் வருடப்பிறப்புக்கும் தேர்த்திருவிழா மிகவும் கோலாகலமாக நடைபெறும் என்றும் மிகவும் சந்தோஷமாகவும், பெருமையுடனும் கூறினார்கள்.

அங்கு விஷப்பாம்புகள், பூச்சிகள், நுளம்பு, அட்டை, நத்தை முதலியன உள்ளன என்றும், தாங்கள் இரவில் வெளியே செல்லும் பொழுது "டோச்லைற்"(Torch Light) கொண்டு செல்வதாகவும் கூறினார்கள். அங்கு "நெடுந்தீவு மகா வித்தியாலயம்" என்று ஒரு உயர்தரப்பாடசாலை ( Secondary School ) இருப்பதாகவும், பாடசாலை நாட்களில் 3 மைல் தூரம் பாடசாலை செல்லவும் 3 மைல் தூரம் திரும்ப வீடு வரவும் 6 மைல்கள் நடந்தும் ஓடியும் வருவதாகவும், அதுவே தங்களுக்கு சிறந்த பயிற்சியாக இருந்ததாகவும் சொல்லுவார்கள்.

அங்கு வீட்டிலே பசு, ஆடு என்பன வளர்த்து காலையும் மாலையும் பால் கறந்து தாங்கள் தேனீர், கோப்பி குடிப்பதாகவும் கூறினார்கள்.

இவற்றையெல்லாம் கேட்கும் பொழுது அம்மா, அப்பாவின் பிறப்பிடமாகிய நெடுந்தீவுக்குச் செல்ல வேண்டுமென்று எனக்கு மிகவும் ஆசையாக இருக்கின்றது. ஆனால் இலங்கையில் உள்ள இனப்பிரச்சனையால் இப்பொழுது அங்கு செல்ல முடியாது என்றும் நிலமை சீராக வரும் பொழுது கூட்டிச் செல்வதாகவும் அம்மாவும், அப்பாவும் கூறினார்கள்.

எனவே அங்குள்ள நிலைமை சீரடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மிக்க நன்றியுடன்
விக்னேஸ் லோகராஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மண்

ஆழ்கடல் அன்னை தாலாட்ட, இயற்கை அன்னை அரவணைக்க, நீண்ட பழம்பெரும் வரலாற்றைக் தன்னகத்தே கொண்டதாக மிளிரும் நெடுந்தீவு அன்னை இலங்கைத்தீவின் சிகரத்திற்கு நிகரானவள். ஆடம்பரமின்றி, அமைதியாக வரலாற்றில் பல இடங்களை பதித்த பெருமை நெடுந்தீவுக்கு உண்டு. மதம், மொழி என்ற இரண்டையும் தம்மிருகண்களாக நேசிக்கும். அதற்காக தம் உயிரையே அர்பணமாக்கப் பின்னிற்காத உயரிய பண்பாளர்களை தம் பிள்ளைகளாகக் கொண்டவர் நெடுந்தீவு அன்னை. இவ்வன்னை ஈந்த புதல்வர்கள் பலர் சர்வதேச ரீதியில் புகழ் வாய்ந்தவர்களாக மிளிர்ந்து வருகின்றார்கள். தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளில் இருந்து, கவிஞர் அமுது, ஆண்டகை ஜோஸப்பு என்று நீண்ட பட்டியல் ஒன்றை தன் தியாகச் செம்மல்களாக தாங்கி நிற்பவள் நெடுந்தீவு அன்னை. நெடுந்தீவு அன்னையின் புத்திரர்களாய் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமம் வளம் பல படைத்து, பண்பாடு காத்து பார்போற்ற வாழ்பவர் பலர்.

“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே” என்ற வாக்கு போல நாம் எந்தெந்த தொலைவில் இருந்தாலும் தாயண்ணையின் பெயரின் கீழ் ஒன்றுபடுவதும் ஒற்றுமையாக வாழ்வதும் இணைந்து செயற்படுவதும் மகிழ்வானதும் மறக்கமுடியாததுமான ஒன்றாகும்.

புலம் பெயர்ந்து இம்மண்ணின் புத்திரர்களாக நாம் மாறினும் எம் தாய் மண்ணை, தமிழ் மண்ணை நாம் மறக்க முடியுமா? எம் தாய் மண்ணின் வளர்ச்சிக்கும் நம் மண்ணில் வாழும் சகோதரர்களின் நலனுக்கும் நம்மால் ஆனதை செய்ய வேண்டாமா? எங்கள் கரங்களின் பற்றையும் அதன் பலத்தையும் அது தரும் வளத்தையும் எம் மண் எதிர்பார்த்து நிற்கின்றது. இதற்கு ஏதாவது செய்வதற்கு நாம் கடமைப் பட்டுள்ளோம். “கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்ற முதுமொழி போல் எம் தாய் மண்ணில் மூலை முடுக்கெல்லாம் ஆலயங்கள் அமைந்து உள்ளன. ஆனால் இன்று அவை பூசை இல்லா நிலைக்கு மாறும் அவல நிலை அடைந்துள்ளன. இத்துடன் அவற்றைப் புது பொலிவுடன் மெருகூட்டி பக்திக் கூடங்களாக மாற்ற முடியாத நிலை தோன்றி உள்ளது. பாடசாலைகளில் மாணவர்களுக்கு நவீன கல்வியை வழங்கும் நிலை இல்லை. கல்வியை தொடர முடியாத வறுமை நிலையில் வாழும் மாணவர்கள், மருத்துவ வசதிக்குறைவு, போக்குவரத்து வசதிக்குறைவு என பல பிரச்சினைகளுக்கு மத்தில் வாழும். எம் உடன் பிறப்புகளுக்காக, இவற்றை நாம் எண்ணிப்பார்க்க வேணடும் இவற்றிற்கு ஒரு விடிவு வேண்டாமா?

நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டிய நேரம், கரம் கோர்த்து பலம் சேர்ந்து வளம் தேடிப் பாதுகாக்க வேண்டிய நேரம், நாம் எல்லோரும் சேர்ந்து சிந்துப்போம், நல்லதை செய்வோம் அதை இன்றே செய்வோம் இனிதே செய்வோம். நம் மண் வாழட்டும், நாமும் வாழ்வோம். மக்கள் சேவை மகேசன் சேவை என்ற வழியில் நாமும் பணியாற்றுவோம்.

கு. சோதிராஜா
உபதலைவர்
நெடுந்தீவு ஒன்றியம் (ஐக்கிய இராச்சியம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகள் நனவாக முயற்சிகள் தொடரட்டும்

வளர்ந்துவரும் இந்த 21ம் நூற்றாண்டில் உலகில் எந்தவொரு பகுதியில் நடக்கும் நிகழ்வுகளையும் ஒரு கணத்திலேயே அறியக்கூடிய வாய்ப்பை தகவல், தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் அளிக்கிறது. தொலைபேசி, தொலைநகல், இணையம் போன்ற இவ்வூடகங்கள் படத்துடன்சேர தகவல்களை உடன் பரிவர்த்தனை புரிகின்றன. ஆனாலும் எமது தீவகத்திலிருந்து எந்தவொரு செய்தியையும் நாம் தெரிந்துகொள்ள முடியாதிருப்பது எம் எல்லோர் மனதிலும் ஒரு தவிப்பை ஏற்படுத்துகிறது.

நெடுந்தீவில் வாழும் மக்கள் அங்கேயே கணனிகளில் பயிற்சி பெற்று, அப்பயிற்சியின் அறிவை அவர்கள் எங்கும் பயன்படுத்தத் தக்கவகையில் ஆற்றல் பெறவேண்டும் என்பதும், அதற்கு வெளிநாடுகளில்வாழும் நாம் உதவவேண்டும் என்பதும் நீண்ட நாள் அவா. இதில் அங்கு நிலவும் மின்சார வசதியின்மை முக்கிய தடையாக அமைகிறது. எமது தீவகத்துக்கான முக்கிய தேவைகள் பலவாக இருப்பினும், இக்கணனி அறிவு வளர்ச்சியை அம்மக்களுக்கு ஏற்படுத்துவதும் அவசியமான தேவையெனவே கருதலாம்.

எமது தீவகத்திலுள்ள பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் குறைந்தது இரண்டு கணனிகளாவது இருக்க வேண்டும். எனினும், மின்சார வசதியுள்ள பாடசாலைகளுக்கு தற்போது கணனி-களை வழங்கி, அவற்றைப் பராமரிப்பதற்கும், அவற்றில் பயிற்சியை அளிப்பதற்கான ஆசிரிய பயிற்சிக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தின், அதன் மூலம் ஏனையவர்களைப் போல எமது ஊரின் இளம் சந்ததியினரும் ஆரம்பப் பள்ளிகளிலேயே கணனி அறிவைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பாகும். இச்சேவை விரிவடையும் பட்சத்தில் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தொலை நகல், இணையம் போன்றவற்றை ஏற்படுத்தி, தமது மேற்படிப்பின்போது இம்மாணவர்கள் கணனி உபகரணங்களை மிக சாதுரியமாக கையாண்டு தொழில் நுட்பதிறனை மேம்படுத்தும் விதத்திலான அடிப்படை அறிவை பெறுவதற்கு இது பெரிதும் துணையாகும் என்று நம்பலாம்.

எமது தீவகத்தில் சில இடங்களில் கணனி, தொலைபேசி வசதிகள் உண்டு. தொலைபேசி சேவை யாழ்ப்பாணத்திலிருந்து வானொலி இணைப்பு மூலம் தான் முன்னர் இயங்கியதாக எண்ணுகிறேன். தற்போது இச்சேவை எப்படி தொழில்படுகிறது என்பது சரியாக தெரியவில்லை. எனினும் இலங்கையில் முன்னரை விட மிகவும் சாதுரியமான ஊடகங்களின் மூலம் தற்போது தொலைபேசிச் சேவைகள் நடைபெறுகின்றன. இவை எமது தீவகத்துக்கும் சாத்தியமானவையாகவிருந்தால் அங்கும் இச்சேவைகளை பரவலாக நடைமுறைப்படுத்தும் முயற்சிகளில் நாம் எல்லோரும் முன்வரவேண்டும்.

பாடசாலைகளில் இணைய வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் அங்குள்ளவர்களும் நாமும் பரஸ்பரம் விடையங்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ள வழிகோலுவதுடன், தொலைக்கல்விப் பயிற்சிமூலம் அந்த மாணவர்களின் அறிவை வளர்க்கவும் வேலை வாய்ப்புக்களுக்குரிய தொழிற்பயிற்சிகளை அளிக்கக்கூடிய வாய்ப்புக்களையும் அவர்களுக்கு ஏற்படுத்த முடியும். இவ்வேளையில் திரு.சு.இ.பசுபதி அவர்கள் 1994 ஆண்டில் தெரிவித்திருந்த கருத்து ஒன்று நினைவில் எழுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The pure service lies on the hand of honesty. Straight forwardness sincerity and hard work I am confident that these factors will bind us to form a happy and united family.

(புனிதமான சேவை என்பது நேர்மை. ஒளிவு மறைவின்மை. விசுவாசம். கடினஉழைப்பு என்பவற்றிலேயே தங்கியுள்ளது. மகிழ்ச்சியும் ஒற்றுமையுமான குடும்பம் ஒன்றை உருவாக்குவதில் இவை எம்மை பிணைந்து நிற்கும் என்று நான் திடமாக நம்புகின்றேன்.)

தேவைகளை நாடி எமது முயற்சிகள் தொடரட்டும். தீர்க்க தரிசனத்துடனான நடவடிக்கைக-ளில் எமது தீவகம் வளம் கொழிக்கும்.

யா.குலேந்திரன்
நிர்வாக சபை உறுப்பினர்
(நெடுந்தீவு ஒன்றியம் ஐ. இ)

# Tamil Identity

What do we mean when we use the expression 'Tamil identity'? What is meant by identity in the first place? What determines one's identity? Is it the way we dress or the colour of our skin? Is it our name or our DNA? Or is it our postcode or which passport we hold?

We may be able to determine our identity by answering all these questions and more.

Most of us tick the 'Asian - Other' box in the 'ethnic origin' section of official forms. So, are we Asian, Sri Lankan or Tamil? Surely, holding a British passport must make us British! British would mean a citizen of Britain but it does not have any ethnic connotation. If we are asked for our ethnic origin, we must say Eelam Tamil.

An American journalist once asked, "If you wake up at a different time, in a different place, could you wake up as a different person?" I don't know what answer he got but the Buddhists, according to their teachings, would give 'yes' as the answer.

Having been born and brought up in London, I identify myself as being an Eelam Tamil in ethnicity and British in citizenship. I cannot deny that I am legally British and have certain duties and responsibilities towards this community,i.e. pay the tax and obey the rules! However, I cannot hand-on-heart declare that I am British. This may be because I was born at a time when fellow Tamilians were being persecuted in their homeland and others were fleeing into more welcoming hands abroad. I have always been surrounded by those affected or those finding ways to help the victims. That, I believe, gave me a sense of belonging to the Eelam community.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Another reason why I don't feel completely British is that I am still not accepted by the white British as British! The Home Office which confers British citizenship on me also treats me as a second class British citizen. The fact that it allows me to have dual citizenship is another proof that I am not a first class citizen.

உயர பிறந்தாலும், சீமையில் பிறந்தாலும், நான் ஈழத்து ஊர் குருவிதான்!

Given the return of the current full scale civil war in our motherland, is it not our duty to recognise our roots and do what we can to help our brethren in whatever way we can. People are suffering in the land where our parents and grandparents lived the happier parts of their lives. Most places in Eelam have representative societies abroad such as **our own Delft Society (UK)**. Every fortunate member of such societies should come forward to support their own families and neighbours in Eelam. It's all very well hoping ICRC, Oxfam or any other charity will help them, but we have a moral obligation to help our own people and alleviate their miseries.

As the children of the first generation of Tamil Diaspora, we have been gifted with an opportunity to experience an alternative culture. I believe we must accept this and take the productive and virtuous elements of both cultures and use them to develop the people of Eelam. The well-known proverb 'When in Rome, do as the Romans do' comes to mind. We must adapt ourselves to the surroundings in which we live in whilst not forgetting our roots, our ancestors and our heritage i.e. how we became who we are.

**"Life is lived forwards, but understood backwards!"**

Thulasi Mageswaran





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்**

**J/DELFT SAIVAPIRAGASA VIDYALAYAM**

Mr. S. Sathyavarathan B.A.. Sc. Trd (Sp)
Principal

நெடுந்தீவு.
DELFT

## எழுக! ஏழுக! கலங்கரை விளக்கே!

ஐக்கிய இராச்சியம் வாழ் எம்மவர்
ஐக்கியமாகினர்!அன்பால் பிணைந்தனர்!
அமைத்தனர் நெடுந்தீவு ஒன்றியம் தன்னை
அணைத்தனர் எம்மண் சேர்ந்தோர் பலரையும்
பிறந்த மண்ணின் வேதனை போக்க
இழந்த நலன்களை ஈட்டிக்கொடுக்க
இனிதாய் மன்றம் அமைத்தனர் அங்கு
எண்ணம் உயர்ந்தது! தியாகம் உயர்ந்தது!
மண்ணில் பாசம் மலைபோல் வளர்ந்தது!
மகிழ்ந்து கூட்டினர் கலங்கரை விளக்கம்
நிறைந்த தகவல்களை சிறந்து தரவல்ல
கருத்து நிறைந்த கலங்கரைத் தலைப்பு!
திக்குத்தெரியாது திசைமாறும் கப்பலுக்கு
திசை தனைக்காட்டி வழிகாட்டுவது போல்
கரைதனைக் காட்டி கடைத்தேற்றுவது போல்
திசைதெரியாமல் திகைத்து நிற்கும்
வழிதெரியாமல் கலங்கி நிற்கும்
நல்வாழ்விற்காக ஏங்கிநிற்கும்
உடன் பிறப்புக்களின் ஊன்றுகோலை
அட்சய பாத்திரமாய் அள்ளிக்கொடுக்க
நிறைந்த செல்வம் நேரதாய் ஈட்டி
வளர்ந்து ஓங்கி செழித்துச் செழிப்புற
கலங்கரை விளக்கே காலமெலாம் வாழி!
கவின்பெறு பணிகள் நிறைவாய் ஆற்றி
காலத்தால் அழியா நெடிய சேவைகள்
நிறைவாய் ஆற்றி நீடுபுகழ் கொண்டு
நிலைத்து நிற்கும் நெடிய மன்றமாய்
எழுந்து நின்று வாழி! வாழி!
ஆழிசூழ் எம்தீவின் அலைகடல் ஓசையென
அமுது இயற்றிய அரிய கவிதையென
விருந்து படைத்துச் சிறக்கும் பண்பென
பரந்து பெருகுக கலங்கரை விளக்கே!
நின் ஒளி மழையில் நம்மவர் தழைக்க
இருள் சூழ் வாழ்வின் அவலங்கள் நீங்க
ஒளிதரு முதலாய் விடியலின் கீற்றாய்
எழுக! எழுக! கலங்கரை விளக்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றித்து வாழ வாழ்த்துக்கள்



உலகில் முதிர்ச்சி பெற்ற பல்வேறு நாடுகளும் வளர்ச்சியடைந்து நாகரீகமாக, அமைதியாக உலக சம்பவங்களைக் கருத்தில் கொண்டு ஒன்றிணைந்து செயலாற்றுகின்றனர். இதற்கு முன்னோடியாக ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியம் எனும் பேரமைப்பை உருவாக்கி மொழியால் வேறுபட்டாலும் தங்கள் கருத்து வேற்றுமைகளை களைந்து செயலாற்றுவது கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை. இவ் ஐரோப்பிய நாடுகளில் பலம்வாய்ந்ததும் மிகுந்த ஜனநாயகமுடையதுமான பிரித்தானியாவில் வாழும் நீங்கள் இதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

திசையெங்கும் பிரிந்து வாழும் நெடுந்தீவு மக்கள் தாங்கள் வாழும் நாடுகளில் தமது தீவக மக்களை ஒன்றிணைத்து ஒன்றியங்கள் அமைத்து செயற்படுவது என்போன்றவர்களை பெருமைப்பட வைக்கிறது. அதன்படி ஐக்கிய இராச்சிய நெடுந்தீவு ஒன்றியத்தினர் செழிப்புற, சிறப்புற என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கனடாவில் நெடுந்தீவு மக்கள் இணைந்து கனேடிய நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் எனும் அமைப்பினை உருவாக்கி தங்கள் தாயகத்திற்கு பணிபுரிந்து வருவதை நாம் அறிவோம். அதேபோல் இங்கிலாந்தில் வாழும் எமது தீவக மக்கள் இணைந்து நெடுந்தீவு ஒன்றியம் (ஐக்கிய இராச்சியம் ) எனும் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் இங்கிலாந்து வாழ் மக்களுக்கும் தங்கள் பிறந்த மண்ணுக்கும் தங்களால் ஆன பணிகளை செய்து வருவது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

அக்காலத்தில் நெடுந்தீவில் வாழ்ந்த பெருமக்கள் நாட்டை சீர்திருத்தும் விடயங்களில் முன்னோடியாக விளங்கியவர்களுக்கு ஒற்றுமையுடன் வழங்கிய ஒத்துழைப்பே காலகெதியில் நெடுந்தீவு மக்கள் கல்விமான்களாகவும், வைத்தியம் மற்றும் தொழில்சார்ந்த வளர்ச்சியிலும் பெரும் முன்னேற்றம் பெற உதவியது என்றால் இது மிகையல்ல.

அத்தகைய ஒற்றுமையுடன் நாட்டை வளம்படித்தியவர்களின் வழித்தோன்றல்கள் காலத்தின் கட்டாயமாக இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் சென்ற இடம் எல்லாம் தம் மண்ணின் பெயர் பதித்து வாழ்ந்து வருகின்றனர்.

கணிசமான நெடுந்தீவு மக்களைக் கொண்ட பிரித்தானியாவில் ஒன்றிணைந்திருக்கும் நீங்கள் இவ் ஒன்றியத்தினை பலமுடைய அமைப்பாகவும், பொதுப்பணியில் தளராத ஊக்கமுடைய அமைப்பாகவும் உருவாக்கி எமது தீவகத்திற்கும் சேவை பல புரிந்து அங்கே வாழும் எமது சிறார்களுக்கும் உங்கள் தேசப்பற்றை புகுத்தி வாழ்ந்து பயனடைவீர்கள் என்பது எனது எதிர்பாரப்பும், ஆவலும் ஆகும்.

இங்கிலாந்தில் வாழும் அனைவரும் இணைந்து செயலாற்றி, கருத்தொருமித்து நெடுந்தீவு ஒன்றியத்தில் இணைந்து செயலாற்றுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டி வாழ்த்துகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் தங்களால் வெளியிடப்படவுள்ள மலருக்கு ஆசி வழங்குமாறு என்னிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக் கொண்டமைக்கு எனது இதயபூர்வமான மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறேன்.

ஒன்றியத்தின் நற்பணிகள் சிறப்புடனும் நலமுடனும் என்றென்றும் நடைபெற இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

நா. கணபதிப்பிள்ளை
நெடுந்தீவு
(ஓய்வு பெற்ற கிராமத் தலைமைக்காரர்)
28.09.2006

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிந்தனவே

கலாபூஷணம் புலவர் ஏ டபிள்யு அரியநாயகம்
(முன்னாள் பிரதேச சபைத் தலைவர்)

## "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றொன்று தன்னினும் தள்ளாமை நீர்த்து" (குறள் 596)

என்ற வான் புகழ் வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப மனிதன் தன் மனதிலே நினைப்பனவற்றை உயர்வான நல்ல எண்ணங்களாக எண்ண வேண்டும்.

"நல்லனவற்றையே நினை நல்லனவற்றையே செய்" என்று நம் முன்னோர்கள் எமக்கு எடுத்துரைப்பது இதனாலேயே தான்.

"உள்ளத்தின் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்"

என்ற கவிஞர் பாரதியின் வாக்கிற்கு ஏற்ப ஐக்கிய இராச்சியத்தில் வாழும் எம் தீவக மண்ணின் மைந்தர்கள் வாழ்வதைக் கண்டு நெடுந்தீவு மக்கள் மட்டுமன்றி பல நாட்டில் வாழும் மக்களும் பெருமை அடைகின்றனர்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பரின் அருள் வாக்கையும் "எல்லோரும் இன்புற்றிருப்பதன்றி வேறறியேன் பராபரமே" எனும் தாயுமான சுவாமிகளின் நல்வாழ்க்கையும் நன்குணர்ந்து, தமக்கென வாழாப் பிறர்க்குரிவர்களாக வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றனர்.

தாம் பிறந்த மண்ணின் பெயரால் ஒன்றியம் அமைத்து கலங்கரை விளக்கம் எனும் பெயரால் சிறப்பு இதழும் வெளியிட்டு நாற்றிசையும் தம் மண்ணின் புகழைப் பரப்புகின்றனர்.

கடந்த 30 ஆண்டுகளாக நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த அனர்த்தங்கள், கொலைகள், கொள்ளைகள், உயிரிழப்பு, பொருளிழப்பு போன்ற காரணங்களால் "பட்டது போதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படமுடியாது இனத் துயரம்" என்ற நிலையில் இடம் பெயர்ந்து புலம் பெயர்ந்து கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ் போன்ற பல ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்றனர்.

இவ்வாறு வாழ்பவர்கள் பலர் தாம் பிறந்த தாய் நாடு எனச் சொல்லவே வெட்கமடைகின்றனர். இத்தகையோர்

எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே - அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே - அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே - இதை
வந்தனை கூறி மனதிலிருத்தியென்
வாயுற வாழ்த் தேனோ?

இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த்தரு
ளீந்தது மிந்நாடே - எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்தது மிந்நாடே - அவர்
கன்னியராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே

என்பதையும், "தாய் நாட்டில் அன்பு கொளாதவன் எதன் மாட்டும் அன்பு கொளான்" என்ற ஆங்கிலக் கவி பைரனின் கூற்றினையும்

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தனவே" என்பதையெல்லாம் தெரியாதாரே.

தான் பிறந்த மண்ணையும் தாய் நாட்டையும் அன்பு செய்யாது

"தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்தியம் இவை உண்டு தானுண்டென்போர்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோர்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணர்களாக வாழ்வதாகப் புரட்சிக் கவிஞன் பாரதிதாசனின் இலக்கியத்திற்கு இலக்கணமாக வாழ்பவர்களே.

ஐக்கிய இராச்சியத்தில் வாழும் எம் மண்ணின் மைந்தர்கள் பலர் உயர் கல்வி கற்பதற்காக அங்கே சென்று பல்துறையிலும் சீருடனும் சிறப்புடனும் வளமுடன் வாழ்கின்றார்கள். தம் மண்ணின் மைந்தர்களையும் வாழ வைக்கின்றார்கள்.

"தேடிச் சோறு நிதம் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக வுழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே" (பாரதியார்)

வாழாது நெடுந்தீவு ஒன்றியத்தின் மூலமும் தனிப்பட்ட ரீதியிலும் பல்வகை அபிவிருத்திகளையும், விசேட செயற்றிட்டங்களையும் பயனை எதிர்பாராமல் செய்வது குறிப்பிடத்தக்கதாகும்.

தான் வாழ்ந்தால் மட்டும் போதாது, பிறரும் நலமுடன் வாழவேண்டுமென தூய உள்ளம், அன்புள்ளம் பெரிய உள்ளம் கொண்டு வாழும் இவர்கள் எல்லாம் கருவிலே திருவுடையவர்களுக்கன்றி வேறெவர்க்கு வரும்.

விருந்தோம்பலில் பண்பும், பிறர்க்கெனவாழும் இயல்பும் நம் நாட்டின் தனிச்சிறப்பன்றோ.

திரையெறியுங் கடலணங்கள் தாலாட்டும் தீவு
செந்தமிழின் மனங்கமழுங் தென்றலுலாத்தீவு
கரையொதுங்கும் நித்திலங்கள் கதிரெறிக்கும் தீவு
காமதேன் ஆனிரைகள் கற்பகஞ்சேர் தீவு
புரையறவே கற்றவர்கள் புகழ்விரிக்கும் தீவு
போற்ற விருந்தோம்பி மனம் பூரிக்கும் தீவு
தரையிலுயர் தீவுகளில் நன்மதி போல் தோன்றித்
தனித்துவத்தின் மகத்துவத்தை விளக்கும் நெடுந்தீவு என்றும்,

இயற்கை அன்னை தாலாட்ட
வளந்து நாளும்
இன்பமுடன் துயர் நீங்கி
வாழும் மக்கள்
தனிச் சிறப்புக் கண்டு
நெடுந்தீவு அன்னை
தலை நிமிர்ந்து வாழ்கின்றாள்.
உலகில் இன்று

எனக் கவிஞர்கள் புகழ்ந்து பாராட்டும் தீவு நம் தீவு நெடுந்தீவாகும்.

கடந்த ஒரு நூற்றாண்டாக இயற்கை காலநிலை மாற்றங்களால் நெய்தல், மருதம், முல்லை, பாலை எனும் நால்வகை நிலங்களும் மாற்றமடைந்து நிலவளம், நீர் வளம் என்பன மாற்றமடைந்தன. இதன் காரணமாகப் பல மக்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்குத் குடியேறினர்.அண்மைக்காலமாகப் பலர் இடம் பெயர்ந்து, புலம் பெயர்ந்து பற்பல நாடுகளில் வாழ முற்பட்டனர். அரசாங்கமும், ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் நம் தீவிற்கு அள்ளிப் போடாவிட்டாலும் கிள்ளியும் போடாததால் போக்குவரத்து, குடிநீர், கல்வி, வைத்தியசேவை என்பன முன்பிருந்ததிலும் பலவகையில் பின்னடைந்தே காணப்படுகின்றன.

இந்நிலையில், பசுத்தீவு, பால்தீவு எனவும் யாழ்ப்பாண வைபவமாலையில்கூறப்படும், மருத்துவமாவனம் பண்டைய சிங்கள நூலிற் காணப்படும் "ஔசதலோகய" என்பவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீவையா குறிக்கும் என ஆய்வாளர்களே சந்தேகத்தோடேதான் நோக்குவர்.

சங்கம் மருவியகாலத்தில் இளங்கோ அடிகளாரால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தின் காவியத் தலைவி கண்ணகியின் காற்சிலம்புடன் தொடர்புடைய வெடியரன்கோட்டை,

இராமயணத்தில் இடம் பெறும் அனுமான் தூக்கிச் சென்ற சஞ்சீவ மலையில் இருந்து உதிர்ந்த பகுதி.

நெடுந்தீவு கிழக்கில் பாண்டவர்கள் தங்கிச் சென்ற பிரதேசம் என்பன இத்தீவு புராண இதிகாச காலங்களிலேயே புகழ் பெற்று விளங்கியதை அறிய முடிகிறது.

இத்தீவின் சிறப்பினைக் கண்ட போர்த்துக்கேயர் "இல் காஸ்டாஸ் என்றும்", ஒல்லாந்தர் "டெல்வ்ற" எனவும் பெயர் சூட்டி அழைத்தனர். இவர்களின் காலத்திலும், ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்திலும் ஏற்பட்ட நினைவுச்சின்னங்கள் உல்லாசப்பயணிகளை பெரும் வியப்புக்குள்ளாக்குகின்றன.

பாருக்குள்ளே நல்ல நாடாக விளங்கிய நம் நாடு இன்று நம்மிற் பலராலேயே புறக்கணிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இந்த மண்ணில் எம் சொந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ முடியும் வாழ்வாங்கு வாழ வழி காட்ட முடியும் என்ற குறிக்கோளுடன் செயற்படும் நெடுந்தீவு ஒன்றியத்தின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.


*Trumpet Food & Wine*

10 Queensbury Station Parade, Queensbury
HA8 5NR

Tel: 020 8952 9926
Fax: 020 8952 0201



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

நெடுந்தீவு ஒன்றியம் ஐக்கிய இராச்சியம் தனது மூன்றாண்டு நிறைவை நினைவு கூரும் இந்நேரத்தில் கலங்கரை விளக்கம் எனும் மலர் வெளியீடு செய்வதையிட்டு மனமகிழ்வடைவதுடன் இம்முயற்சிக்கு எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதற்மைய, தனித்தொரு மனிதனால் ஆற்றமுடியாத பல காரியங்கள் பலர் சேர்ந்து முயற்சிக்கும் போது அவை எளிதில் வெற்றி பெறுமென்பது யாவரும் அறிந்ததே. இதற்கேற்ப பிரித்தானியா வாழ் நெடுந்தீவு மக்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய இவ்வொன்றியம் கடந்த ஆண்டு அங்கேயுள்ள பாடசாலை மாணவர் நலன் கருதி ஒருசில நற்பணிகளை ஆற்றியுள்ளது. இனிவரும் ஆண்டுகளில் அவை மேலும் விரிவாக்கம் பெற வேண்டுமாயின் புலம் பெயர் வாழ் எம் தீவக மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

தீவகம் சென்று வரும் சந்தர்ப்பம் ஒன்று சென்ற ஆண்டு எனக்கு ஏற்பட்டது. சுமார் பத்து நாட்கள் அங்கு தங்கியிருந்த நாட்களில் பல துறைகளிலுள்ளவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

முன்னர் நீர்வளம், நிலவளம், கடல்வளம் நிறைந்த நம் தீவகம் காலநிலை மாற்றத்தினாலும் மக்களின் இடம்பெயர்வு காரணமாகவும் பல துறைகளில் பின்னடைவை சந்தித்து வருவது யாவரும் அறிந்ததொன்று. இதைத் தடுத்து நிறுத்துவது எமது சக்திக்கு அப்பாற்பட்டதாயினும் எம்செயற்பாடுகள் சிலவற்றினால் ஏற்பட்டு வரும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு முடியும். உதாரணமாக, தீவத்திற்குப் பொருத்தமான மரங்களை நடுவதனால் வரட்சியைத் தவிர்ப்பதுடன் குடிநீர் உவர்த்தன்மையடையும் வேகத்தையும் குறைக்க முடியும். நீர் நிலைகளை ஆழமாக்கி மழைநீர் கடலுக்குச் செல்வதைக் குறைப்பதன் மூலமும் குடிநீர்ப்பிரச்சனையை குறைக்க முடியுமென்பது எனது கருத்து. தீவகத்தின் இயற்கை வளத்தை சீர்குலைக்கும் புதியதொரு காரணியாக "சுனாமி" எனப்படுகின்ற கடல்கோள் உருவாக்கமடைந்திருப்பது நாமறிவோம். இதனால் கடலோரங்கள் சிதைவடைந்து நிலப்பரப்பு நாளுக்கு நாள் குறைவடைவதோடு மட்டுமன்றி இயற்கை வளமும் அழிவடைய வாய்ப்புண்டு. இதற்கு மக்கள் செறிவாக வாழும் தீவகத்தின் வட கடலோரப்பகுதி அணை கட்டியோ அல்லது பெரும் கற்களில் அரண் அமைத்தோ பாதுகாக்கப்பட வேண்டியது முக்கியமானது.

தீவகத்தின் கடல் போக்குவரத்து முன்னர் போன்று எதுவித முன்னேற்றமும் இன்றி அதே நிலைதான். மருத்துவத் துறையும் எதுவித முன்னேற்றமுமின்றி கவலையளிக்கக்கூடிய நிலையிலேயே உள்ளது. இவ்விரு துறைகளும் அரசாங்கத்தின் ஒத்துழைப்பின்றி சீர்செய்வது கடினமாகத்தான் இருக்கும்.

பல துறைகளில் தீவகம் சரிவை எதிர்கொண்டிருப்பதும், கல்வித்துறை ஓரளவு நல்ல நிலையிலிருப்பதை அறிந்து மனநிம்மதி அடைந்தேன். குறிப்பாக பாலர் பாடசாலைக் கல்வி தீவகம் முழுவதும் ஓரளவு திருப்தியடையக் கூடியவகையில் உள்ளது. இதற்கு அங்கு இயங்கிவரும் தென்னிந்தியத்திருச்சபையினரின் பணிகள் இந்நேரத்தில் நினைவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரத்தக்கது. நெடுந்தீவு மகாவித்தியாலயம் முன்னைய நிலையிலிருந்து சற்றும் தளர்ந்துவிடாமல் தனது கல்வித்தரத்தைப் பேணி வருவது மனமகிழ்ச்சியைத் தருகிறது. இதற்காக அப்பாடசாலை நவோதயப் பாடசாலையாக வகைப்படுத்தப்பட்டு இயங்கி வருகிறது. ஏனைய பாடசாலைகளும் நன்றாக இயங்கி வருவதுடன் அவைகளுக்கு கிடைக்கும் வளங்கள் அவ்வளவு திருப்தியற்றதாகவுள்ளதை அறிந்து கொண்டேன். எனவே, இங்கிருந்து நாம் செய்யும் உதவிகள் அத்தனையும் சமமான முறையில் சகல மாணவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படல் அவசியம் என்பது கவனிக்கத்தக்கது.

வளர்ந்து வரும் கணணியுகத்தில் எண்ணற்ற வேவைகளுக்காக நம் தீவக மக்கள் தங்கி நிற்கின்றனர். தற்போதைய நம் தேசத்தின் போர்ச்சூழலில் அரசாங்கமோ, தனியார் துறையினரோ அல்லது புலம்பெயர்வாழ் நெடுந்தீவு மக்களோ சகல தேவைகளையும் நிறைவு செய்ய முடியாதென்பது உண்மை. இருப்பினும் அங்குள்ள மக்கள் மேற்படி குறிப்பிட்ட நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகளை இனங்கண்டு அவர்களின் ஒத்துழைப்பைப் பெறின் தமது அதிகுறைந்த அடிப்படைத் தேவைகளையாவது பூர்த்தி செய்ய முடியும். அந்த வகையில் எமது நெடுந்தீவு ஒன்றியம் மக்களின் தேவையறிந்து தன்னாலான உதவிகளை அவ்வப்போது ஆற்றிவரும் என்பதை இவ்வொன்றியத்தின் உறுப்பினர் என்ற வகையில் கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றேன்.

**வாழ்க நம் மக்கள்**
**வளர்க எம் தீவகம்**

ஜெயவதி கணேஷன்
(நிர்வாக சபை உறுப்பினர், நெடுந்தீவு ஒன்றியம்)
ஓய்வு பெற்ற அதிபர்
நெடுந்தீவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெடுந்தீவிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் தீவின்வளர்ச்சிக்கு உதவவேண்டும்

புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள நம் தீவு மக்கள் பளையமாணவர் சங்கங்களோ,ஒன்றியங்களோ,நிறுவி நிதி திரட்டி நமது நாட்டுக்கோ நாட்டிலுள்ளவர்களுக்கோ நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கோ உதவவேண்டியது நமது கடமையாகும். இவ்வாறு வேறு நாடுகளைச்சேர்ந்தவர்கள் உதவுவதைக்காணும் போது அவர்களைப்பாராட்டாமல் இருக்கமுடியாது. உள்நாட்டிலேற்பட்ட யுத்தக்கெடுபிடிகளால் பாடசாலைகள் பலவும் வேறு பொதுஸ்தானங்களும் படுமோசமாகச் சீரழிந்த நிலையில் இருப்பதை நேரடியாக நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அவையாவும் சீர்செய்ய வேண்டியது மிக மிக முக்கியமானதாகும். போர்க்காலத்துக்கு முன்பதாகவே அரசாங்கத்தின் பாராமுகப்போக்கால் பாடசாலைகளின் வளர்ச்சிகள் பாதிக்கப்பட்டிருந்தபோது பாடசாலைகளின் பழையமாணவர்கள் சங்கங்கள் ஊர்ஒன்றியங்கள் பாடசாலைகளின் தேவைகள் பலவற்றை ஈடுசெய்வதற்குக் கைகொடுத்ததுள்ளன. எனவே பழையமாணவர் சங்கங்களின் உதவியும்.

ஊர்ஒன்றியங்களின் உதவியும் இன்றைய காலகட்டங்களில் பாடசாலைகளைக் கட்டியெழுப்புவதில் நின்றுவிடப்போவதில்லை. தொடர்ந்தும் பாடசாலைகளுக்கு உதவி தேவையாகவே உள்ளது. எமது பிள்ளைகள் பெரும்பாலானோருக்கு தாம் கற்ற பாடசாலை பற்றிய அறிவு முற்றாகவே இல்லை. அவர்கள் முதலில் நமது பாடசாலைகளைப்பபற்றித் தெரிந்துகொள்ள வைக்கவேண்டும். பெரும்பாலான பழையமாணவர்சங்க நிகழ்ச்சிகளில் இளையதலைமுறையினரைக் காணமுடிவதில்லை. பெற்றோர்கள் மாத்திரமே மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுகிறார்கள். பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை அழைத்துவர முயற்சிக்கவேண்டும். பிள்ளைகளுக்கும் நமது பாடசாலைபற்றிய உணர்வு ஏற்படுமாயின் அவர்களின் ஆதரவு அப்பாடசாலைக்கு அடுத்தடுத்த தலைமுறையின்போதும் ஏற்பட வாய்ப்புண்டு. பழையமாணவர்கள் சங்கங்கள் இந்தத் தலைமுறையினருடன் மறைந்துபோகாமல் தொடர்ந்து இங்கே இயங்கிவரவேண்டும். எனவே இளையதலைமுறையினரைக் கவரக்கூடிய முறையில் அவற்றின் அமைப்பு மாற வேண்டும்.ஆகவே பழையமாணவர் சங்கங்களை நலன்புரிச்சங்கங்களாக மாற்ற வேண்டும். இப்பொழுது ஊர்களின் பெயர்களிலே பலசங்கங்கள் உள்ளன. அவை அந்தந்த ஊர்களிலே உள்ள பாடசாலைகளைத் தத்தெடுத்து அவற்றுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதுடன் ஊரின் பொதுவான வளர்ச்சியிலும் பங்குகொள்வது மிகவும் அவசியமானதாகும்.

ஆரம்பப் பாடசாலைகள் மேலான நிலையில் இருந்தால் அந்தந்த ஊர்களில் இருக்கின்ற உயர் பாடசாலைகள் முன்னேறமுடியாது. ஆகவே ஊரில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளைமுன்னேற்ற வேண்டியது நலன்விரும்பிகளினதும் ஒன்றியங்களினதும் பழையமாணவர் சங்கங்களினதும் பிரதான கடமையாகும். நமது தீவின் புலம்பெயர்ந்த மக்கள் நம்தாய்நாட்டின் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் ஊரின் அபிவிருத்திக்கும் திறந்த தாராள மனதுடன் ஏராளமான உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும்.

சி. குமாரசாமி
(மரியநாயகம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்வாசம்

பிறந்த மண் பாசமும் துடிப்பும்
பெற்றோர் தவிப்பும் - அழகிய தீவில்
அடிவைத்த போது எம்மிடமும் பற்றிக்கொண்டது!!
ஐரோப்பிய மண்ணில் பிறந்த தங்கைகளிடம் கூட
அப்படியே வெற்றி கொண்டது
எப்போ மீண்டுமென்ற ஆவலும்
ஏக்கமும் தொற்றிக் கொண்டது . . .

சின்ன வயதில் செலிசுடும் குண்டுக்கு
மேசைக்குள் பதுங்கியது ஞாபகம் - இன்றோ
வீதியெல்லாம் துப்பாக்கியாய்
அச்சமும் பீதியும் அருகிலே நிற்கிறது . . .

வரண்டு கிடக்கும் தீவில்
வறுமையிலும், இராணுவக் கொடுமையிலும்
தப்பி ஓடிப் படித்துத் தழைக்க
துளிர்கள் தவிக்கிறது . . .

முன்னர் நீச்சலடித்த குளமாம்
வெற்றுத் தரையாய் வெடித்து புழுதி பறக்கிறது
பசுத்தீவின் கன்றெல்லாம் பால் குடிக்க வகையற்று
தாய் மடிவற்றிக் கிடக்கிறது . . .

மூச்செறிந்து மண்விலக்கி புல்வேர் தேட
வலிமையற்று குதிரையெல்லாம் மடிகிறது . . .
நோய் தீர்க்க மருந்தற்று - வைத்தியசாலை
அருகிருக்கும் கோட்டைபோல் அமைதியால் கிடக்கிறது . . .

குமுறும் அலைகட்குள் - சிறு படகுகளில்
குளறிக் கரைசேரும் அவலம் தொடர்கிறது . . .
கடலிறங்க தடையாலே கட்டுமரமெல்லாம்
கரையினிலே உக்கிப்போகிறது . . .

இத்தனைக்குள்ளும் எதிர்கொண்டு நிற்கின்ற
மண்ணின் தனிவாசம் - நாளை
இளைய தலைமுறைக்கும் கிளைவிட்டு
விழுது பரப்பட்டும் ! அழைத்துச் செல்லுங்கள் !!

கிறிஸ்ணி கங்காதரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவின் செழுமையைக் குலைத்த ஒல்லாந்தர் ஆட்சி



போத்துக்கேயரிடமிருந்து கீழைத்தேய வர்த்தகததையும், நாடுகளையும் கைப்பற்றிய ஒல்லாந்தர் அவற்றை ஸ்த்திரப்படுத்த பலவித யுத்திகளைக் கையாண்டனர். அதனால் இலங்கையில் பல நிலப்பகுதிகள் இயற்கை வளம் குன்றி சீரழிந்த நிலைக்குத் தள்ளப்பட்டன. அவற்றுள் நெடுந்தீவும் ஒன்றாகும்.

ஒல்லாந்தர் வருகைக்கு முன்னர் இத்தீவு நீர் வளம், நிலவளங்களில் மேலோங்கி, "பால்தீவு" "பசுத்தீவு" "பருத்தித்தீவு" எனபல நாட்டவராலும் போற்றிப்புகழப்பட்டு வந்தமையை நூல்கள் பலவற்றின் மூலம் அறியக்கிடக்கின்றது. தென்னிந்திய நூல்களிலும், குறிப்பாக இராமநாதபுரம்மாவட்டத்திலுள்ள பொன்பரப்பி பகுதியில் நிலவும் கலை, கலாச்சார பாரம்பரியங்களிலும் இதனை அறியக்கூடியதாக உள்ளது.

இத்தீவு, இரு பருவக்காற்றுப் பிரதேசங்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்தமை இதன் செழுமை மேலோங்குவதற்குக் காரணமாகியது.

மக்களின் பயிர்ச்செய்கையின் பொருட்டும் மந்தைவளர்ப்பின் பொருட்டும் பல குளங்கள் வெட்டப்பட்டு அவை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன. இத்திட்டத்தை திராவிடரின் ஒன்றிணைந்த குளநீர்பாசனத்திட்டம் எனக்கூறுவர். காட்டாறுகள் குளங்களையும்தரவைகளையும் நிரப்பி மண்ணை வளமாக்கி இத்தீவகத்தை செழுமைப்படுத்தின. மந்தைவளர்ப்புக்கு மிகவும் உகந்த இடமாக இருந்தமையால் மந்தைகளின் பெருக்கம் பொருளாதாரரீதியில் இங்கு வெற்றியைஅளித்தது. இரு பருவக்காற்றுகளாலும் இம்மந்தைகளுக்கு எதுவிதபாதிப்பும் ஏற்படாத வகையில் இத்தீவின் தென்கிழக்குப்பகுதியில் செயற்கையான உறைவிடம் உருவாக்கப்பட்டது. இதனைப் "பூவரசங்காடு" என அழைப்பர். மந்தைகள் மழை, வெயில் கடும் காற்றுக்காலங்களில் இக்காட்டுப்பகுதியில் ஒதுங்கும்.

இத்தீவில் ஆங்காங்கே கேணிகளும் வெட்டப்பட்டன. கடல் நீர் உட்புகாவண்ணம் தரவைகள் பேணப்பட்டு வந்தன. வடக்கிலும் தெற்கிலும் மென்மையான சில பகுதிகளில் மணல்மேடுகளை உண்டாக்கியும் கடல் அலையின் வேகத்தைத் தணிப்பதற்காகவும் கரையிலிருந்து ஒரு கிலோமீற்றர் வரையிலான கடற்பரப்பில் கற்களை பரப்பி, அவற்றை இணைக்கும் பெருட்டு ஒரு வகையான வளரும் கற்களைத்தூவி இக்கற்கள் யாவும் இணைக்கப்பட்டன. இக்கடற்பகுதி "இறைவெட்டை" எனஅழைக்கப்படுகிறது.

1662ம் ஆண்டு தொடக்கம் 1795ஆம் ஆண்டுவரையும் இலங்கையின் நிலைகொண்டிருந்த ஒல்லாந்தர் ஆட்சி, நெடுந்தீவின் நிலவளத்தைச் சீர்குலைத்து விட்டது இத்தீவகம் குதிரைகளை வளர்த்து அவற்றைப் போருக்காக வெளியே அனுப்பும் இடமாக மாறியது. இத்தீவின் நிர்வாகம் ஒல்லாந்தர்கையில் இருந்த தன்நிமித்தம் தரை நீர்ப்போக்கு வரத்து ஏற்படுத்தப்பட்டது. ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருந்த குளங்கள் கடலுடன் இணைக்கப்பட்டன. சிறு வள்ளங்கள் மூலம் சென்று குதிரைகளைக் கண்காணிப்பதற்கும் தொடர்பான மற்றும் அலுவல்களுக்கும் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து இவர்களுக்கு மிகவும் பயனள்ளதாக இருந்தது. அத்துடன் வடக்குத் தெற்கு முனைகளுகட்கிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவை ஊடறுத்துத் துரிதமாகச் செல்லடிய நீர்வழி அமைக்கப் பட்டமையால் கடல் நீர் இவைகளுக்கூடாகக் குளங்களுள் பரவியது. வரட்சியான காலங்களில் நீர் வழிப் போக்குவரத்தைச் சீர்செய்ய குளங்களை ஆழமாக்கினார்கள்.

இத்தீவு "வட்டில்" போன்ற வடிவமைப்பைக் கொண்டிருந்தமையால் மழைகாலங்களில் தீவகம் முழுவதும் வெள்ளம் பரவியிருக்கும். செழித்து வளர்ந்திருக்கும் புற்களை இவ்வெள்ளம் சில மாதங்கள் வரை மூடியிருக்கும். இதனால் இக்காலத்தில் குதிரைகள் புல் மேய முடியாமலிருக்கும். குதிரைகளை மேய வைப்பதற்காக தீவகத்தைச் சுற்றிலும் நீர் நீங்கு வாய்கால்களை வெட்டி, மேலதிகமாகத் தேங்கிநிற்கும் வெள்ளத்தை ஒல்லாந்தர் கடலுட் பாச்சினர்கள்.

மழை நீர் கடலுள் செல்வதால், தரையின் செழுமைமிக்க மண்ணையும் எடுத்துச் செல்கிறது. இதனால், தற்பொழுது பெரும்பாலான நிலப்பகுதி கற்பரவை நிலமாகவே காட்சியளிக்கிறது. மேலும், கடுமையான காற்றுக்காலங்களில் நீர்நீங்கு வாய்க்கால்கள் ஊடாக கடல்நீர் உட்புகுந்து நிலத்தின் தன்மையை முற்றாகவே கெடுக்கின்றது.

இவ்வாறு ஒல்லாந்தரின் 133வருட ஆட்சிக்காலத்தில் நெடுந்தீவின் நீர்வளம், நிலவளம் யாவும் குன்றியதில் மக்கள் வெளியூர்களுக்குக் குடிபெயர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டது. இந்த 133ஆண்டுகால ஆட்சியில் ஏற்பட்ட இத்தீவக மக்களின் பொருளாதார சீர்குலைவைச் சீர்செய்யும் வகையில், இத்தீவகத்தின் தற்போதைய நிலையினை ஆய்வுசெய்து, இதனை மேம்பாடன அதன் பழைய பொருளாதார நிலைக்குக் கொண்டுவர இலங்கையரசும் நெதர்லாந்து அரசாங்கமும் ஒன்றிணைந்து கூடியவிரைவில் செயற்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். இதற்கான ஆய்வுகள் பின்வரும் விடயங்களில் மேற்கொள்ளப்படலாம்.

1.இத்தீவகத்தின் தற்போதைய தரைத்தோற்றத்தினையும் குளங்களில் நிலைகளையும், அவை இணைக்கப்பட்டிருந்த தன்மையினையும் ஆராய்தல்.
2.குளங்களைச் சுற்றியுள்ள சுற்றரண்களை உயர்த்துதல்.
3. எல்லாக்குளங்களையும் ஒன்றிணைத்து, மழைநீர் எல்லாக் குளங்களிலும் தேங்கி நிக்கச் செய்தல்.
4. வெள்ளம் ஏற்படும் அறிகுறிகள் தென்படுங்காலத்தில் குறித்த ஓரிரு நீர்நீங்கு வாய்க்கால்கள் மூலம் மேலதிக நீர் வெளிச்செல்ல, ஏற்றதான பொறிமுறையில் நீர்நீங்கு வாய்க்கால்கள் அமைத்தல்.தீவகத்தைச் சுற்றிலுமுள்ள நீர்நீங்கு வாய்க்கால்கள் அனைத்தையும் நிலமட்டத்துக்கு மூடுதல்.
5. கடல்அரிப்புத் தடுப்பு, கடல்அலைகள் வேகத்தைத் தணிப்பு, காற்றுத்தடுப்பு என்பவற்றை மேற்கொள்ளுதல்.

மேற்கூறிய யாவற்றுக்கும் தனித்தனித் திட்டம் வகுக்காது அனைத்தையும் ஒன்றிணைந்த திட்டமாக அமைதல் வேண்டும். அப்பொழுதுதான், ஒரு கால்நுற்றாண்டு காலத்தில், இத்தீவகத்தில் அதன் பழைய செழுமையை நாம் காணமுடியும்.

வி. சுப்பிரமணியம்

(நன்றி-வீரகேசரி- 13.03.1994)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு.
12.10.2006

இலண்டன் மாநகரில் புலம்பெயர்ந்து சென்ற நல்லுள்ளம் கொண்ட எம் தீவகமக்கள் சிலர் ஒருமித்து நல்நோக்கோடு நெடுந்தீவுஒன்றியம் (ஐக்கிய இராச்சியம்) எனப்பெயரிட்ட அமைப்பை உருவாக்கி அதனூடாக நெடுந்தீவின் வளர்ச்சிக்கான பலதிட்டங்களை வகுத்துள்ளமையும் அவற்றின் முன்னேற்பாடாக நெடுந்தீவு வைத்திய சாலையில் துருப்பிடித்துப் பழுதடைந்திருந்த வெளிவாசல் கேற்றை அகற்றி புதியதொன்றையும், நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு தொலைநகல் இயந்திரமொன்றையும் வழங்கியுள்ளனர். அத்தோடு இவ்வொன்றிய நிர்வாக சபை உறுப்பினரான Dr. க.ஈ.சந்திரபால் அவர்கள் கடந்த ஆண்டு நெடுந்தீவு வைத்தியசாலையில் மருத்துவ முகாம் ஒன்று வைத்து, காது மூக்கு தொண்டையில் ஏற்படுகின்ற உபாதைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளும் இலவசமருந்தும் வழங்கியதோடுவைத்திய அதிகாரிக்கான கைநூல் ஒன்றும் இதயத் துடிப்பறியும் கருவியொன்றும் (Stethosecope) வழங்கியுள்ளதையும் நானறிவேன்.

நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் மன்றம் கனடா செய்யும் மேலான பணி-களைப் போன்று இவ்வொன்றியம் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மாணவர்கட்கும், முதியோர்களுக்கும் மாதாந்திர ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கல், கல்விவளர்ச்சி, பாடசாலைகள், வைத்தியசாலை என்பவற்றிற்கு தேவையான உபகரணங்கள், மருந்துவகைகள் வழங்கல், வீடுகளில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைத்தல், மரக்கன்றுகள் நாட்டுதல், சிறு குளங்களைப் புனரமைத்தல் போன்ற இன்னோரன்ன சேவைகளை முன்னெடுப்பீர்கள் என எம்மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மனிதர்கள் இயந்திரங்களைப்போல் இயங்குகின்ற வெளிநாடுகளில், இப்படியான பொதுப் பணிகளைச் செய்ய முன்வருபவர்களைப் போற்றாமலும் பாராட்டாமலும் இருக்கமுடியாது. எனவே இவ்வொன்றிய உறுப்பினர்கள் சிறப்போடு வாழ்ந்து,,, எம்மண்ணுக்கான சேவைகளைத் தொடர வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுவதோடு தங்களால் வெளியிடப்படும் மலரும் சிறப்புற வாழ்த்துகின்றேன்

எஸ் கோபலசிங்கம்
தலைவர்
நெடுந்தீவு
ப.நோ.கூ.சங்கம்


# DELFT FOOD & WINE

769 - 771, Harrow Road
London NW10 5PA




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mr. K.kanagaratnam. Bsc Jp
1.Birkbeek Court
Acton W3 6BQ
London

# நம் தீவகம்

நம் தாயகம் இலங்கை மாலையாகவும், இதன் பதக்கமாகவும் நெடுந்தீவு பதக்கத்தின் தூக்கணமாக மனதில் எழில்கொள்கிற வேளையில் பெருக்குமரத்தின் உருக்கமான செய்தியை மனதிருத்தி எழுத விளைகின்றேன்.

நம்மைப்பெற்றெடுத்த அன்னை தந்தை தவழ்ந்த இத்தீவகம். பால்தீவு பசுத்தீவு உல்லாசபுரித்தீவு எனப் பல புனைபெயர்களைத் தன்னுள் அடக்கியுள்ளது. காரணவாயிலாக உரைக்கப்படுகின்ற செய்தியிலே பெருக்குமரத்தை சூழவுள்ள தாமிளாப்புக்குளத்தை அண்டியபுல் வெளிகளினாலும் பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்ற வெல்லை வெளிப்புற்தரைகளினாலும் வெட்டுக்களி, சாராப்பிட்டிபோன்ற இடங்களில் அமோகமாக கட்டக்காலியாக ஆடுமாடுகள் மேச்சல் நிலங்கள் நிறைந்த புல்வெளிகளினாலும் புல்வெளித்தரைகள் அமோகமாக காட்சிதந்தமையினால் பசுந்தீவென்றும் கூறப்படுகிறது.

அடுத்தபடியாக மேற்படிநிலங்களிலே மேச்சலை நடத்திவிட்டு காலை மாலை தவறாது பட்டிகளுக்குச் சென்று பாலைச்சொரிந்ததினால் பசுத்தீவென்றும் இப்பாலை என்னசெய்வதென்றறியாது திகைத்து தோணி தோணியாக இந்தியா இராமேஸ்வரத்திற்கு அனுப்பிய காரணத்தினாலும் ஊர்காவற்துறையிலுள்ள கம்மன்கீல் கோட்டையைக் கட்டுவதற்கும் இத்தீவகப் பாலைச் சர்க்கரையோடு சேர்த்துக்கட்டியதாயும் கர்ண பரம்பரைக்கதைகளில் பால்தீவு என்றும் புனைபெயருக்குச் சான்று பகருகிறது.

சைபீரியா ஆபிரிக்கா அவுஸ்த்திரேலியா போன்ற இடங்களிலுள்ள பட்சிஇனங்கள் தீவகத்திலே மும்மாரிபொழிந்து குளம்குட்டைகள் (நெய்குளம்,தாமளாப்பு, வெட்டுக்களி) நீர்தேம்பி வழிந்த காரணத்தால் தாராக்கள் நாரைகள் கோட்டான்கள் கூழக்கடாக்கள் பறந்துவந்து உல்லாசமாய் வாழ்ந்தும் வர்க்க விருத்தி செய்துவந்த காரணத்தாலும் வெளிநாட்டவர் பழைய இராசதானிக் கோட்டைகளையும் குயிந்தா போன்ற வெளிச்சவீடுகளையும் குதிரைலாயம் கட்டிடத்தோற்றத்தையும் சாராப்பிட்டி பூதம்பொழிந்த நீர்க்கிணறுகளையும் கூட்டம் கூட்டமாய் வாழும் குதிரைகும்பல்களையும் பார்த்தும் இரசித்தும் கற்பகதருதரும் பதனீரைச் சுவைத்து ருசித்து இரசிப்பதற்குமாக பலர்வந்து போகிறமையினாலும் உல்லாசபுரித்தீவென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்றும் கூறப்போனால் கந்தப்ப முதலி, கனகராய முதலி, குணநாயகமுதலி, தனிநாயகமுதலி, இராமநாதமுதலி, ஆகிய ஐவர் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய காரணத்தினால் இத்தீவகம் காணிகளுக்கும் கல்வெட்டுப்பாடுவோர் பாடல்களில் வம்சாவழிகளும் பெயர்களும் சூடப்பட்டிருப்பதையும் நாம் கண்டறியக்கூடியதாய் இருக்கிறது. இத்தீவிலே மக்கள் நீடிய ஆயுள்உள்ளவர்களாய் வாழ்ந்தார்கள் என்பதற்கும் சான்றுகள் உண்டு. இங்கு ஆயுர்வேத வைத்தியர்கள் சிறந்த சேவைசெய்யக்கூடிய மூலிகைகளான செடிகொடிகள் நிரம்பிய தீவகமாக திகழ்ந்ததால் என நம்ப இடமுண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமறிந்தமூலிகைகள்உத்தமாகாணி, குறிஞ்சா,மொயிட்டை, கோரை தகரை கத்தாளை முல்லை ஆடாதோடை பாவட்டை முடக்கொத்தான் கறுத்தக் காக்கணவன்,பனந்தாளை, மாதுளை,சீந்தில், பொற்சீந்தில்,

இங்குள்ள மக்கள் கடற்தொழில் செய்தும் கமத்தொழில் செய்தும் உத்தியோகம் பார்த்தும் உயர்ந்தோர் ஆவர் பலர் தாய்மொழி கற்று ஆசிரியர்களாயும் பிறமொழிகற்ற பட்டதாரிகளாயும் லிகிதர்களாயும் பணிபுரிகின்றார்கள்.

உலகத்தை உற்று நோக்கினால் இத்தீவகமக்கள் டாக்டர்களாய் புலவர்களாய் பட்டதாரிகளாய் பணிபுரியாத இடமே இல்லையென்றே கூறலாம். இத்தகைய திறமைகள் மலிந்த நம்தீவகத்தை நெடுந்தீவென்ற ஒன்றியம் என்ற பாணியில் முன்னேற்ற வந்துதித்த எம்மரிய சோதர சோதரிகளுக்கும் இளஞ்சிறார்களுக்கும் நன்றி கூறி பெருக்குமரம்கூறும் உருக்கமான செய்திகளை மனதிருத்தி உன்னிப்பாக சேவைகளை சிறப்புச்செய்து நம் தீவகத்தை வளப்படுத்த வேண்டி நிற்கின்றேன்.

திரு.கனகரத்தினம்



நெடுந்தீவு மத்தி பெருக்கடி சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் 02.07.2006இல் சிறப்பாக நடைபெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CONGRATULATIONS

Deaf emigré aims high

STUDENT Mangai Tharmalingham transformed her life by learning English and enrolling on a teacher training course.

Mangai, whose full name is spelt Mangayarkkasay, lives in Walthamstow, is deaf and came to England from Sri Lanka in 1997 unable to speak English.

She enrolled in an intensive English for Speakers of Other Languages course. This was followed by a second English class, after which she applied for a teacher-training course for deaf people at the City Lit.

Now, less than five years later, Mangai, 25, is doing a BSc in information technology and a further teacher training course.

"I don't think I will ever stop studying," said Mangai, who has just been named as an outstanding learner by the Corporation of London as part of Adult Learners Week.

Angela Diamond, who nominated Mangai, said: "The transformation of one woman's life has within it the seeds that transform the lives of many schools comes into contact with, both as a learner and a teacher."




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Gosala Gopalakrishnan

Gosala did her BSc (Pharmocology) in the University College London. She did the Hasti in King's College London. She then joined the reputed Queens Medical Centre at the University of Nottingham for research work and completed her PHD. As a research worker she was selected to join Howard University USA for her research. After a short period of work at Howard she was chosen as by the staffs of the university as a research coordinator. Gosi is the daughter of Jhavan and Anuam.

## NEWS ONLINE

14 **MediaWeek** 5-12 September 2006

Former Opodo sales manager takes key commercial role at online sales house

# Chandrapal moves to Blue Lithium in commercial role

By James Livesley

Online sales house Blue Lithium has appointed Shirlene Chandrapal as commercial director to replace Richard Holman.

New media sales veteran Holman, a former UK MD of AdLink, was instrumental in helping managing director Tim Brown establish the company in the UK, but only ever intended to stay on a short-term basis. He has moved on to pursue other interests.

Chandrapal will now have responsibility for the company's sales and relationships with online publishers. One of her first tasks will be the transfer of products from the US office, including "Leadvance", a data-capture product.



**Chandrapal: commercial director**

Chandrapal joins from travel website Opodo where she was sales and distribution manager, with responsibility for advertising, sponsorship deals, marketing, search engine optimisation and affiliates.

She has had experience working in content services for Vodafone and was part of the team that helped launch Vodafone Live!

Brown and Chandrapal previously worked together at Real Media during the time it became 24/7 Real Media.

Chandrapal is now hoping to increase the number of staff at Blue Lithium to 23 by the end of the year. The company has also appointed Joanne Cox, formerly account director for digital agency Wheel, as marketing director.

Blue Lithium does not represent websites on an exclusive basis, but builds relationships with online publishers to source advertising inventory as and when it is needed.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Centre: 12270
Subject Code: (3651)



24 August 2005

Gauthaman Chandrakumar
c/o Queen Elizabeth's School

Dear Gauthaman

GCSE EXAMINATIONS – SUMMER 2005

I am very pleased to tell you that you are amongst the group of candidates who scored one of the top five marks in French Specification A this summer. There were 138508 candidates for the examination so this is an exceptional result.


May I congratulate you on such an outstanding achievement and wish you every success with your future studies. Queen Elizabeth's School has been informed of your achievement.

Yours sincerely

Mike Cresswell

Michael Cresswell
Director General

MOTHER : KALAMATHY
FATHER : CHANDRAKUMAR
DELFT – 11
LONDON :- 326, HONEYPOT LANE
HARROW
HA7 1DU



This is Kavian Kulasabanathan of Delft receiving his 1st place prize in a nation wide art competition, from the Lord Mayor of the City of London. He won a laptop computer and family tickets to various tourist attractions.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Nimalan Maruthainar FRCS Ed(Tr &Orth)
MBBS, BSc(Hon)

Nimalan Maruthanar has recently been appointed as consultant orthopaedic surgeon and honorary senior lecturer at the Royal Free Hospital in London.

He did his medical degree MBBS, also at the Royal Free Hospital.

Nimalan was an anatomy demonstrator at the Leeds University. For a while and also was clinical lecturer at University College London. He had his specialsit train ing at the famous Royal National orthopaedic hospital in STANMORE.

Nimalan is the elder son Kamala and Maru.

**RAGULAN'S NEWS AGENT**

**GROCERY & OFFLICENSE**

628, Kingsbury Road,
Kingsbury
WW9 9HN


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோபுரக் கலசம்

இன்பத் தமிழ் நிலத்தே அழகாய்ச் சுற்றிக் கடலலைகள்
பண்புத் திறன் நிமிர்த்தி நெளிந்தே காட்டித் தழுவுதடி
அன்புத் துளி அழகும் அமுதம் போலும் தமிழழகும்
நெஞ்சில் நிலைக்குமடி நெடுந்தீவின்பத் தோணியிலே

சுற்றம் குடி துவண்றி குலவி முற்றம் மலர்பரவி
புற்றும் நிறைந்தவண்றி கூடியோர் வாசனை இன்பமடி
கற்றுத் தெளிவுதரு காணும் வாழ்வின்பச் சீமையிலே
குற்றம் கடுகளவும் காணாய் பேரின்பச் சீமையிலே

பழமைத் தமிழர்பலத்தே கோட்டை கொட்டிக்கிடக்குதடி
இளமைப்புலத்தழகோ திருவில் மூழ்கத் தவிக்குதடி
கோபுரம் சாய்ந்ததடி கொடியோர் தீயிலும் சூழ்ந்ததடி
யாழ்புலம் வேகுதடி அதனின் வெம்மையில் சாகுதடி

பாலம் வழி சமைக்கும் படகின் பயணம் தொலைந்ததடி
ஆலம் ஏனு ஒளிரும் சுடரும் சூரியனாகுதடி
கோலம் இழந்தடி தாமின்பத் தீவினிலே
காலம் இழந்துருகி தனியே நின்று தவிக்குதடி

வெட்டிக் குதறி நின்றார் வெறியில் குத்தி மகிழ்வுகெண்டார்
குட்டிமணி சிறையில் கூராங் சீறிச் சிரித்து நின்றார்
கிட்டக் கடல் எமதார் சிங்களன் வெட்டி மகிழ்ந்தனையோ
பட்ட துயர் மறவோம் பயணித்த குமுதினியை

கூனல் வளையுலவுங் காணி நிலம் மறவோம்
கானல் குடைபிடித்து நீழும் தூண் உடைத்து
வானும் வாசலிலே வண்ணத் தூறலிட
கானம் வீசிவரும் வீணை ஒலிபரவ
வீரப் பாட்டிசைக்க தாயே கண் திறவாய்

நிலம் மறவோம்
நலம் செய் செயல் மறவோம்
வான் மறவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்கும் முகில் மறவோம்
கொடுத்துக் குலம் வளர்க்கும்
கொடை மறவோம்
தாய்நிலத்தைத் தாங்குகின்ற
ஒன்றியமே
நீ ஓங்குக
கோபுரக் கலசமாய்

திலகன் குணநாயகம்
"தாயகம்"


**REMY TRADING**

**THE WHOLESALERS OF GROCERY'S & OFF-LICENSE**

**308 East Cote Lane**
**South Harrow HA2 9AH**

**Tel: 020 8423 5451**

**BARANI'S**

**THE WHOLESALERS OF GROCERY'S & OFF-LICENSE**


**Harrow HA1 4UD**

**Tel: 020 8424 0827**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALOE VERA



Aloe vera is one of the herbal plants which is investigated worldwide and proven to be beneficial in human health and nutrition. This is also called Miracle plant and natural healer. In Delft, we call it **'Kaththalai'**. Historically, Aloe has been used since 3500 BC. So this article is to rather refresh your knowledge on Aloe Vera.

**No** one would be surprised that information about Aloe Vera is published in a magazine for Delft people. Aloe is extensively grown in all parts of Delft Island. We do not need to spend even a penny to cultivate this plant in Delft. It is one of the 'Van Payirs' in Delft. According to Ramayana, Sri Hanuman carried the Sanjeevi Mountain over Delft to Sri Lanka to treat Rama's troops and it is said that some herbal plants dropped in the Island. Aloe may be one of them.

In this article I would like to focus on the health and nutritional aspects of Aloe. It has three major properties as far as the health is concerned.

**1.Nutrition**

It contains the following:

| | |
|---|---|
| Minerals: | Magnesium, Manganese, Zinc, Copper, Chromium, Calcium, Sodium, and Potassium. |
| Vitamins: | Vitamin A, C, E and B12. Aloe is one of the few plants which has vitamin B12 being beneficial for vegetarian. |
| Amino acids: | Aloe has 20 out of 22 amino acids. It contains 7 of the 8 essential amino Acids. |

It also contains sugars, fatty acids ,lignins,saponins and anthraquinones.

2.Immunity

It has a balancing effect on immune system. It does a 'fine- tuning' on the immune


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

system so that it gives immunity against microbes and reduces the chance of autoimmune process as well.

3. Epithelial protection
It has stabilising effect on surface tissue including skin, digestive tract, and lungs. It protects these tissues from injuries. It also promotes healing of the wounds.

**B**ecause of the above effects patients with following diseases benefit as proven by researches.

Skin: eczema, psoriasis, burns, bites, acne and wounds

Bowel: irritable bowel syndrome and diverticulitis.
Autoimmunity: asthma, rheumatoid arthritis and lupus.

**I** am sure that we all understand well the huge benefits of Aloe, even though we cannot forget the ghastly smell of **'Kaththalai.'** Through proper purification and processing juice and cream with pleasant smell and taste can be produced.

Good luck for 'Kalanakarai Vilakkam'

Dr Nagamany Yoganayagam
RMO
Harley Street Clinic
London


# STAR ROOSTER

**FRIED CHICKEN & PIZZA**

**20 HARROW ROAD, WEMBLEY HA9 6PG**

**Tel: 020 8902 7002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SOLID AS A ROCK**

**Granites...Marbles...Tiles**

**75 Bensham Grove, Thorton Heath, Surrey CR7 8DX**

**Tel: 020 8653 9006**
**Fax: 020 8653 9008**

# NAG & CO.

## SOLICITORS

## Administrators of Oaths

*Conveyancing*

*Asylum*

*Family Reunion*

*Work Permit*

*Working Holiday Visa*

*Student Visa*

*Visitors Visa*

*Matrimonial*

*Housing*
- *Landlord & Tenant*
- *Dispairs*

*Traffic Offences*

*Consumer Contract*

*Employment*

Community Legal Service

Specialist Help Point

Unit 3, Holles House, Myattsfield Road South
Overton Road, London SW9 7JN

**Tel: 020 7737 1211**

Fax: 020 7737 0809

**Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A 2 Z INTERNET CAFE

**5 STATION APPROACH**
**HOE STREET**
**WALTHAMSTOW**
**Tel: 020 8521 3111**

# J.R. AUTOS

**Rear of 36a Granfell Road, Mitcham, Surrey**
**CR4 2BY**

**Tel: 020 8685 1807**
**Fax: 020 8685 1807**
**Mobile: 077 9637 1616**

# SUBASREE STUDIO
# DIGITAL MINI LAB

**307, Mitcham Road,**
**Tooting, London**

**Tel: 020 8672 2122**
**Mob: 079 8061 7871, 077 2714 5453**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MOLLISON FOOD & WINE LTD

3 NORTH PARADE, MOLLISON WAY,
EDGWARE, MIDDLESEX HA8 5QH

Tel: 020 8952 7672
Fax: 020 8952 7672

OFF-LICENSE, CONTINENTAL, INDIAN & SRI LANKAN
GROCERIES, FRUIT & VEG &
INTERNATIONAL PHONE CARDS AT DISCOUNT



WELCOME AUTOS

GENERAL SERVICING
&
REPAIRS TO ALL MAKES & MODELS

KUMAR

Mob: 079 3131 6036



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SANGAM

IMPORTS & EXPORTS




Royal Chef

PRIYAM

SANGAM

IMPORTS & EXPORTS

48 BROMLEY ROAD, WALTHAMSTOW, LONDON E17 4PS

Tel/Fax: 020 8531 7077 Mob: 079 7744 0920

Email: esteem_moy@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**The Delft people of France wishes for a sucessfull ceremony of "Kalan Vilakam"**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமோடுவாழ வழிதேடுவோம்

"எண்ணித்துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவம் என்பது இழுக்கு" பொய்யாமொழிப்புலவர்

நெடுந்தீவு ஓர் அழகிய சின்னஞ்சிறு கிராமம். ஆனால் சப்ததீவுகளுக்குள்ளே மிகவும் பெரியது. இங்கே பலவகையானஇங்கு வாழ்ந்த மக்கள் ஒவ்வொருவரும் உழைப்பாளிகளாகவே காணப்படுகின்றனர். உள்ளூர் உற்பத்திகளையும் கைத்தொழிலையும் அசையும், அசைவற்ற சொத்துக்களைத் தளமாகக் கொண்டு மற்றவர்களுக்கு அடிமையின்றி வளர்ந்துவரும் அன்புள்ளம் கொண்டவர்கள். ஆயுர்வேத மருத்துவ மூலிகைகள் நிறைந்து காணப்படுகிறது. இங்கு பிறந்த ஒவ்வொருவரும் நல்ல தேக ஆரோக்கியமும் நீண்ட ஆயுளையும் உடையவர்கள். தன்னியல்பான உள்ளுணர்வுகளால், சிந்தனாசக்தியால், கல்வியறிவிலும் இலக்கியம்சார்ந்த நாடகம் கூத்து என்பவற்றை இயக்கியும் இரசித்தும் கவிதைகளை யாப்பதிலும் சிறந்தவர்கள்.

அறிவியல்ரீதியாக சிறந்த எண்ணங்களையுடையவர்கள். ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் தீவகத்தன் வளச்சியோடு தொடர்புடையவர்கள் என்றுதான் கூறவேண்டும். அனைவரும் இனமதவேறுபாடுகளைக் கடந்து மனிதத்தை நேசிக்கும் பண்புடையவர்கள். இம்மண்ணிலே உள்ளவர்கள் பல்துறைகளிலும் விவேகமுடையவர்களாய் பரந்துவாழ்வதும் யாவரும் அறிந்ததே.ஆனால் பலதுன்பதுயரங்களுக்கு மத்தியிலே தம்மைத் தாமே சமன-நிலைப்படுத்தி வாழும் இவர்களுக்கு விஞ்ஞான அறிவியல் தொலைத்தொடர்புச்சாதனங்களின் தொடர்புகள் அற்றதொருநிலை வளர்ந்துவரும் சமுதாயத்தைப் பாதிக்கின்றது என்பதும் மறுக்கமுடியாததே. இவற்றுக்கான நடவடிக்கைகளை பாடசாலைகளினுடாகவே நிவர்த்திசெய்யமுடியும் என்பது என்னுடைய நம்பிக்கை. எமது மண்ணினுடைய அபிவிருத்தித் திட்டங்களுக்காக நீண்டதொருபட்டியலை பலரும் உருவாக்கலாம் ஆனால் அவற்றைச் செயல்வடிவத்தில் உருவாக்க கடின உழைப்பும் ஒவ்வொருவருக்கிடையில் ஒற்றுமையும் தேவைப்படுகின்றது. அதே வேளை பௌதீகரீதியாக மண்ணின் வளங்களின் பாதுகாப்பை நிலைப்படுத்துவதற்காக மரம் நடுகைத்திட்டத்தை ஓர் ஒழுங்கமைப்போடு ஏற்படுத்துவோமானால் அம்மரங்களுடைய நிழலிலே பலவிதமான அபிவிருத்திகளை இலகுவாக ஏற்படுத்த முடியும் என்பது எனது எண்ணம். இதனை புலம்பெயர் நாடுகளில் வாழும் நெடுந்தீவு மக்களாகிய நாம்சிறு பணஉதவிசெய்வது அவசியமாகிறது. மாதாந்தம் மரநடுகைக்காக ஒரு வாரத்தை ஒதுக்கி தேவையான பகுதிகளைத் தெரிவுசெய்து மரநடுகையை ஆரம்பிக்கவேண்டும். அங்கே வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர்களையோ நடுத்தர வயதினரையோ ஊதியத்தோடு ஊக்ககுவித்தல் முதலாவது கட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்.

இரண்டாவதாக நன்னீர்த்சேகரிப்புத் திட்டத்தினால் ஏற்படுத்தக்கூடிய விவசாய பயிர்ச்செய்கை காய்கறிவகைகளை உற்பத்தி செய்தல் வீட்டுக்கு வீடு வீட்டுத்தோட்டம் கடற்றொழில் கோழி வளர்ப்பு மந்தை வளர்ப்பினாலும் குடும்பரீதியான தன்னிறைவை எட்டும்போது மீதமான உணவுப்பொருட்களுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாக்கும் திட்டங்களை வரைப்படுத்தமுடியும். இன்றைய உலகிலே பாவனையிலுள்ள நவீனமயமான சாதனங்களைப்பயன்படுத்தி மின்சார உற்பத்தியப் பெற்று வீட்டுத்தே வைகளையோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சிறு கைத்தொழிற்சாலையையோ நிர்வகிக்க முடியும். அத்தோடு ஐஸ்கட்டித்தொழிற்சாலையை உருவாக்குவதால் ஏராளமான நன்மைகளை அடையலாம். வேறுபிரதேசங்களைப்போல் நம் தீவகத்தில் வாழும் இளைஞர்களைப் பயன்படுத்தி பலவேலைத்திட்டங்களை நிறைவேற்றக்கூடிய சாத்தியங்கள் உண்டு.

எமது மண்ணிலே வாழ்ந்துகொண்டிருக்கும் இளைஞர்களுக்கு ஓர் சிறு கைத்தொழில் கூடமொன்றை நிறுவி அதற்கூடாக வரும் இலாபத்தை அங்கே கடமைபுரிபவர்களுக்கு வழங்கமுடியும் என்பதே என் எண்ணம். உதாரணமாக பிஸ்கற் தயாரிக்கும் தொழிற்சாலை-யொன்றை உருவாக்குவோமானால் அதனை ஓர் சிறு முயற்சியாக்கி வளர்த்தெடுக்க முடியும். இது அவ்வூரில் வாழக்கூடிய மக்களுடைய, மாணவர்களுடைய வளர்ந்தோருடைய தேவையைப் பூர்திசெய்வதோடு தொழில்சார்ந்த படிப்பினையும் தரவல்லது. கல்வி கற்றுக்கொண்டிருக்க்கூடிய மாணவர்கள் தங்களுக்குவிருப்பமான தொழில் சார் பயிற்சிகளை தாமே ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டுமென்பது மேற்கத்திய கல்வியாளர்களின் கருத்து. இவ்வாறே நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காரியமும் நம்முடைய தீவகத்தின் வளர்ச்சியோடும் வளரும் சமுதாயத்தினுடைய முயற்சியோடும் அமைதல் நன்று. அதனால் எமது மக்களுடைய ஒத்துழைப்போடும் புலம்பெயர் வாழ் மக்களுடைய அனுசரணையோடு பழையமாணவர்சங்கங்கள், ஒன்றியங்கள்,நலன்புரி மையங்கள், போன்றவற்றின் துணையோடு நிறுவக்கூடிய கணனிப்பயிற்சி, வியாபாரம், கைத்தொழில் சமூகத் தொடர்புச் சாதனங்களின் பாவனைகளையும் அவற்றின் பயிற்சிகளையும் விரிவுபடுத்து வோமானால் அங்குள்ள மாணவர்களனைவரும் உள்ளூர்ப் பயிற்சித் திட்டங்களால் மேன்மையடைய வாய்ப்புண்டு.அத்தோடு வருங்காலத்தை வளர்த்தெடுக்ககூடிய சக்தியை இவற்றின் மூலம் தொழில்சார்பயிற்சியாக மேற்கொள்ளும் ஒவ்வொரும் தான்செல்லுமிடமெங்கும் தன்னம்பிக்கையோடு வாழ வழிவகுக்கும்.

அ.வேணுகோபாலன்
(நிர்வாக சபை உறுப்பினர், நெடுந்தீவு ஒன்றியம்)

## Committe Members (DELFT Society UK - 2006)

**President: S Suresh**
**Secretary: S Santhamoorthy**
**Treasurer: K Vasanthan**
**Vice-president: K Sothirajah**
**Asst. Secretary: Mrs Thamilmaran**
**Asst. Treasurer: S Bahirathan**
**Executive committee:** **Dr K E Chandrapal K Mageswaran**
**S Mahalingasivam S Kulasabanathan**
**A Venugopalan Mrs J Ganeshan**
**Mrs N Rajaratnam S Ratnarajah Y Kulendran**

**www.delft.org.uk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

# BEACON Solicitors

**Bank Chambers,**
**32 Cranbrook Road,**
**Illford, Essex 1G1 4NE**
**Tel:020 8553 1893**
**Fax: 020 8514 7185**
**Email: info@beaconsolicitors.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW!!!
KUMARANS
LIMITED
***WHOLESALE***
***Cash & Carry***
138 Hoe Street
Walthamstow
London E17 4QR
020 8521 3444

# KUMARANS TEXTILE

*136 Hoe Street, E17*
*Tel: 020 8521 3444*

- **Silk Sarees**
- **Cotton-Silk Sarees**
- **Fancy Sarees**
- **Casual Sarees**
- **Churidhars**
- **Kidswear**
- **Menswear**

KUMARANS™

# Kumarans
# குமரன்ஸ்

- **Sri Lankan, Indian, Polish, Malaysian and Afro-Caribbean food products**
- **Grocers & News Agent**
- **Household Items**
- **Gift Items**
- **Pooja Items**

**KUMARANS LIMITED**
*Importers & Distributors of*

லீலா

**LEELA**



**KRISHNA**

**Kumarans, 142-144 Hoe Street, Walthamstow, London E17 4QR**
**Tel: 020 8521 4955, 020 8521 4411 Fax: 020 8521 9482**
**E-mail: mages@kumarans.uk.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Design & Printed by: Print Tone, 020 8552 0299*